www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

JANASAKTHI WEEKLY மக்கள் வார இதழ்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு 26ஆவது மாநில மாநாடு 2025 ஆகஸ்ட் 15 16 17 18 சேலம்

▸ மலர் 88 ▸ இதழ் 20 ▸ 2025 ஆகஸ்ட் 17 - ஆகஸ்ட் 23 ▸ 16 பக்கங்கள் ▸ விலை: ரூ.15




# ஏகாதிபத்திய சதிச் செயல்களை எதிர்கொள்ள இதே தோழமையுடன் எந்நாளும் இருப்போம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதி

**சோசலிசக் கியூபாவைக் காப்போம்! ஏகாதிபத்திய சதிகளை முறியடிப்போம்! ஃபிடல் காஸ்ட்ரோ நூற்றாண்டைக் கொண்டாடுவோம்! – முப்பெரும் விழா சென்னையில் 12.8.2025 அன்று நடைபெற்றது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கியூபா குடியரசின் இந்தியத் தூதர் யுவான் கார்லோஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன், மத்தியக் குழு உறுப்பினர் உ.வாசுகி, மாநிலச்செயலாளர் பெ.சண்முகம், இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே. ரங்கராஜன், கியூபா ஒருமைப்பாட்டுக் குழு மாநிலச்செயலாளர் ஆறுமுக நயினார், மாநிலத் தலைவர் திருமதி ரோகிணி




உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

“சோசலிசக் கியூபாவைக் காப்போம்! ஏகாதிபத்திய சதிகளை முறியடிப்போம் என்று முழக்கமாக முன்வைத்திருக்கிறீர்கள். உலகம் முழுவதும் நடைபெறும் ஏகாதிபத்திய சதிகளை முறியடிக்க வேண்டிய நெருக்கடி இப்போது இருக்கிறது. ஏகாதிபத்தியச் சதிகள் என்பது, ஏதோ போர் தொடுப்பதால் மட்டும் ஏற்படுவது இல்லை; இந்தியாவுக்கு 50 விழுக்காடு வரியை அமெரிக்கா பிறப்பித்துள்ளதும் இதே போன்ற சதிதான். இதை ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசு கடுமையாக எதிர்த்தாக வேண்டும்.

இது குறித்து வெளிப்படையான பதிலை ஒன்றிய பா.ஜ.க. அரசும், பிரதமர் மோடி அவர்களும் பதிவு செய்தாக வேண்டும். இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் ஐந்து சுற்று வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் நடந்து, ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு நாள் குறிக்கப்பட்ட நிலையில், எதற்காக அமெரிக்க அதிபர் டிரம்ஃப் அவர்கள் தன்னிச்சையாக வரியை உயர்த்தி அறிவிக்க வேண்டும்?

இந்தியா பாகிஸ்தான் போரை நான் தான் நிறுத்தினேன் என்று டிரம்ப் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அது தொடர்பாக, இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்டால், பிரதமர் மோடி பதிலே சொல்லவில்லை. இது அவருடைய பலவீனத்தின் அடையாளம்!

ஆனால், கியூபாவின் அதிபராக இருந்த ஃபிடல் காஸ்ட்ரோ, பலத்தின் அடையாளமாக இருந்தார். அந்த நாட்டின் பாதுகாப்பு அரணாக இருந்தார். அந்த நாட்டு மக்களுக்குக் காவல் அரணாக இருந்தார். அதனால், உலகத் தலைவர்களின் அடையாளமாக இருக்கிறார்.

ஃபிடல் காஸ்ட்ரோ அவர்களின் நூற்றாண்டு விழாவில், அவர் புகழ் வாழ்க! வாழ்க! வாழ்க! என்று வாழ்த்தி, ஏகாதிபத்திய சதிச் செயல்களை எதிர்கொள்ள நாம் அனைவரும் ஒற்றுமையுடன், இதே தோழமையுடன் எந்நாளும் இருப்போம்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். ■

## ‘அறவாழ்வின் அடையாளம்’ தோழர் இரா.நல்லகண்ணு வாழ்க்கை வரலாற்று நூல் வெளியீடு




◆ “அறவாழ்வின் அடையாளம்” என்கிற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் இரா.நல்லகண்ணு அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், ‘இந்து தமிழ் திசை’ ஆசிரியர் வி.வெங்கடேஸ்வரன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.




◆ “அறவாழ்வின் அடையாளம்” நூலை, முதுபெரும் தலைவர் தோழர் இரா.நல்லகண்ணு அவர்களிடம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், மாநிலக்குழு உறுப்பினர் லி.உதயகுமார், ‘இந்து தமிழ் திசை’ ஆசிரியர் வி.வெங்கடேஸ்வரன், இணைப்பிதழ் ஆசிரியர் ஆதி வள்ளியப்பன், பொறுப்பாசிரியர் வீ. தேவதாசன் உள்ளிட்டோர் வழங்கினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு
26ஆவது மாநில மாநாடு
2025 ஆகஸ்ட் 15 | 16 | 17 | 18 சேலம்

கட்சிக் கடிதம்

# சுதந்திரத்தைப் பாதுகாப்போம்! சோசலிசம் இங்கமைப்போம்!




போர்க்குணமிக்க தோழர்களே!

**ஆகஸ்டு 15ஆம் நாள் நாடு முழுவதும் மூவண்ணக் கொடி பட்டொளி வீசிப் பறக்கும்!**

இருநூறு ஆண்டுகால வெள்ளையர் ஆட்சியை அகற்றிட நம் முன்னோர்கள் சிந்திய இரத்தத்தை, தியாகத்தை நினைவுகூர்வோம்.

அம்மகத்தான போற்றுதலுக்கும் பெருமைக்கும் உரிய தியாகங்களுக்கு இரு கரங்களைக் குவித்து நம் வீர வணக்கத்தைத் தெரிவிப்போம்.

அத்தியாகங்களின் கனவுகள் சாதாரணமானவை அல்ல, அவர்களின் கனவுகள் பெருங்கனவுகள் ஆகும்!

நம்மை ஆண்ட வெள்ளையர்கள் அன்னியர்கள் நமக்கும் அவர்களுக்கும் எவ்வித உறவும் இல்லை. ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை விரட்டியது என்று நம் மூத்தவர்கள் சொல்லிய பழமொழி ஆகும்.

வியாபாரம் என்று சொல்லி வந்தனர். வந்தார்கள் வியாபாரம் செய்தார்கள் நம் மக்கள் அவர்களின் பொருட்களை விலை கொடுத்து வாங்கினார்கள், வியாபாரம் நாளுக்கு நாள் பெருகியது, லாபமும் பன்மடங்கு பெருக் கெடுத்தது.

ஒரு கம்பெனி கொள்ளை லாபம் அடையும் போது, நாமே நாட்டை அபகரித்துக் கொண்டால் ஒட்டுமொத்த தேசத்தையும் தனது குடையின் கீழ் கொண்டு வந்து விட்டால் லாபம் கொள்ளை லாபமாக வெள்ளப் பெருக்குப் போல் பெருக்கெடுக்குமே எனப் பேராசை கொண்ட பிரிட்டானிய அரசு நாட்டை ஒட்டுமொத்தமாகக் கைப்பற்றிக் கொண்டது. அவர்கள் கைப்பற்றுவதற்கு வசதியான வாய்ப்பை அளித்த கருங்காலிகள் பலரும் உண்டு.

மன்னர்கள், குறுநில மன்னர்கள் ஜமீன்தார்கள், நிலப் பிரபுக்கள், மடாதிபதிகள் இவர்கள் ஒவ்வொரு பகுதிகளையும் வளைத்துப் பிடித்து தனித்தனி ராஜ்ஜியம் நடத்தி வந்தார்கள்.

இன்று போல் அன்று ஏக இந்தியா அல்ல. இவை அந்நியப் படையெடுப்புக்கு மிகச் சாதகமாக அமைந்துவிட்டது. நாட்டை அபகரித்தான், ஆட்சியும் நடத்தினான்.

இரு நூறு ஆண்டுகால போராட்டம் நினைத்துப் பார்க்க முடிகின்றதா? இருநூறு ஆண்டுகாலப் போராட்டத்தில் எத்தனை, எத்தனை ஆயிரம் இன்னுயிர்களை வெள்ளை ஏகாதிபத்தியத்தின் பீரங்கிகளும் துப்பாக்கித் தோட்டாக்களும் பறித்திருக்கும்.

அம்மகத்தானவர்களின் இரத்தம் வெள்ளப்பெருக்கெடுத்து அல்லவா ஓடி இருக்கும்.

வெங்கொடுமைச் சிறையில் அடைபட்டுச் சித்திரவதைகளை அனுபவித்தவர்கள், சிறையிலேயே மாண்டு மடிந்தவர்கள் கை முறிந்து, கால் முறிந்து, மண்டை உடைபட்டு நாட்டிற்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட மாசற்ற மாணிக்கங்கள்.

தூக்குக் கயிற்றைத் துச்சமென மதித்தவர்கள் விஷக் கோப்பைக் கண்டு அஞ்சி நடுங்கா வீரப் புதல்வர்கள்.

இவர்கள் எல்லாம் கண்ட கனவு பெருங்கனவு. அன்னியர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். ‘வெள்ளையனே வெளியேறு’ என ஒட்டுமொத்த தேசமும் ஓங்கி ஒலித்தது. அவர்களை வெளியேற்றுவது மட்டுமன்றி அவர்களுக்குப் பின்னர் நம் நாட்டை நாம் ஆட்சி புரிய வேண்டும்! சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும். பாகுபாடற்ற சமுதாயம்! பொதுவுடமைச் சமுதாயம் காண வேண்டும் என்று பெருங்கனவு கண்டார்கள்.

இன்று பல போலிகள் வந்துவிட்டனர். ஆனால் அவர்களின் கரம் உயர்ந்து நிற்கின்றது. அவர்களின் குரல் சத்தமாகக் கேட்கின்றது.

சுதந்திரப் போரில் பங்கெடுக்காதவர்கள் என்பது மட்டுமல்ல, காட்டியும் கொடுத்த துரோகக் கும்பலின் கை ஓங்கி விட்டது.

போராடிப் பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியுமா? என்ற ஐயப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

சுதந்திரம் பறி போய்விடுமோ? என்ற அச்சம் மேலோங்குகின்றது. இவை ஏதோ அரசியல் நடத்துவதற்காகச் சொல்லப்படுவது அல்ல.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக நாட்டின் நடப்புகள் நம்மை இப்படிச் சிந்திக்க வைக்கின்றன.

நமது சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம் இவைகள் கேள்விக்குறி ஆக்கப்பட்டுள்ளன.

நாம் நமது வாக்குரிமையைத் தக்கவைத்துக் கொள்ள முடியுமா? என்கிற கேள்வி சாதாரண கேள்வி அன்று.

எனக்கு வாக்களித்த இந்தியக் குடிமக்களின் பெயர் வாக்காளர் பட்டியலில் இருக்காது என்று முடிவாகிவிட்டால் அதன் தொடர்ச்சி அதன் அடுத்த கட்ட வளர்ச்சி என்பது என்னவாக இருக்கும்?

என்னை ஆதரிக்காதவர்,



என்னை நேசிக்காதவர், என் கட்சியை ஆதரிக்காதவர் நாட்டின் குடியுரிமையை இழப்பார் என்று அறிவிப்பதற்கு அதிக காலம் பிடிக்காது, இன்று பீகாரில் 65 லட்சம் வாக்காளர்கள் நீக்கம் என்பது 140 கோடி மக்களில் இது ஒரு பெரும் எண்ணிக்கை அல்ல என்று கூடச் சிலர் கருதக் கூடும். அல்லது செத்தவர்கள் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்று கூறக்கூடும் அல்லது எதிர்க்கட்சிகளுக்கு வேறு வேலை இல்லை எதையாவது பேசிக் கொண்டிருப்பார்கள் என்று வழக்கம்போல் அலட்சியப்படுத்தக்கூடும்.

ஆயிரம் லிட்டர் பாலில் ஒரே ஒரு சொட்டு விஷத்தை ஊற்றினால் ஒரு சொட்டு தானே, ஆயிரம் லிட்டர் பாலை என்ன செய்துவிடும்? என்று யாராவது கருதினால்?

அது போன்றுதான் இன்று பெரும் அபாயங்களை நாடு எதிர்நோக்கி உள்ளது. இத்தகைய அபாயங்கள் குறித்து அலட்சியப்படுத்திட இயலாது.

நம் முன்னோர்கள் போராடிப் பெற்ற சுதந்திரத்தைப் பேணி பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு இன்றைய இளைய தலைமுறை சார்ந்தது.

தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அன்று நம் பாட்டனும் முப்பாட்டனும் துறந்தார்களே, அத்தகைய தியாகத்திற்குத் தயாராவீர்!

இன்று இளைஞர்களின் பெரும் பொறுப்பும் கடமையும் பெற்ற சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டியது தலையாய கடமையாகும்!

எத்தகைய அநீதிகளுக்கும் இடமளித்தல் ஆகாது. வியாபாரம் செய்ய வந்தவனை அனுமதித்தால் வியாபாரம் தானே என அலட்சியப்படுத்தியதால் அதனை ஒரு பொருட்டாகக் கருதாதால் நாடே அபகரிக்கப்பட்தை இன்றைய இளம் தலைமுறை அனுபவப் பாடமாக, படிப்பினையாகக் கொண்டிட வேண்டும்.

படிப்பினை என்பது ஒரு முறைதான், அதனையே திரும்பத் திரும்பப் பெற நினைத்தால் அது..?

அன்று அந்நிய தேசத்தவர்கள் ஆண்டு நம்மை அடிமையாக்கினார்கள். இன்றோ நம்மவர்கள் என்று சொல்லிக் கொண்டே நம்மையும் நாட்டையும் நாசம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தாய் நாட்டின் சுதந்திரம் இனி என்ன ஆகுமோ? என அச்சப்பட்டுப் பயனில்லை எதுவும் ஆகாமல் இருக்க என்ன செய்ய வேண்டுமோ, அதனை செய்ய ஆயத்தமாவீர்!

சுதந்திரத்தைக் காப்பது மட்டுமல்ல இங்கு சோசலிசம் காண்பதே நம் லட்சியம்! பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாப்போம், சோசலிசம் இங்கமைப்போம் எனச் சூளுரைப்போம்.

நாம் கூடியிருக்கக் கூடிய சேலம் மாநகரில் நம் மாநாடு நடைபெறும் தோழர் எம்.செல்வராசு எம்.பி நகரில் சேலம் சிறைத் தியாகிகள் அரங்கமான, நேரு கலையரங்கில் முகப்பில் ஆகஸ்ட் 15ஆம் நாள் காலை மூவண்ணக் கொடி கம்பீரமாகப் பட்டொளி வீசிப் பறக்கும்.

எங்கள் அருமைத் தோழன் பாஷ்யம் என்ற ஆர்யா மன்னார்குடி பக்கத்தில் உள்ள சேரங்குளம் எனும் குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்த சிறுவனே, வெள்ளையர் ஆட்சியில் சென்னை மாகாணத் தலைநகராக விளங்கிய சென்னையில் தலைமைச் செயலகமாக விளங்கக்கூடிய கோட்டையில் அங்கே வானளாவ அமைந்துள்ள கொடிக் கம்பத்தில் வெள்ளையர்களின் போலீஸ் பட்டாளம் புடைசூழ காவல் காக்க, எவர் கண்ணிலும் படாமல் இரவோடு இரவாக கொடிக் கம்பத்தில் ஏறி வெள்ளையர்களின் கொடியை அகற்றிவிட்டு அங்கே நம் மூவர்ணக் கொடியைப் பறக்கவிட்டார். மாவீரனே! அன்று நீ ஏற்றிய கொடி இன்று நாடு முழுவதும் பட்டொளி வீசிப் பறக்கின்றது.

நம் மாநாட்டிலும் பறக்கின்றது. சேலத்தில் கூடுவோம், விவாதிப்போம் முடிவுகள் எடுப்போம்! செயல்படுத்துவோம்!

மீண்டும் சந்திப்போம்
வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

சுதந்திரத்தைப் பாதுகாப்போம்! சோசலிசம் இங்கமைப்போம்!

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர்கள்

## சிறு குறிப்பு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

# தமிழ்நாடு

## மாநில மாநாடுகள்





| மாநாடு | ஆண்டு | இடம் | மாநிலச் செயலாளர் |
|---|---|---|---|
| 1வது மாநாடு | 1951 | சென்னை | பி.ராமமூர்த்தி |
| 2வது மாநாடு | 1953 நவ.22-29 | பேரூர், கோவை | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 3வது மாநாடு | 1956 பிப். 12-21 | திண்டுக்கல் | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 4வது மாநாடு | 1958 (சிறப்பு) | திருச்சி | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 5வது மாநாடு | 1959 மே. 26-31 | காரைக்குடி | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 6வது மாநாடு | 1961 | கோவை | எம்.ஆர்.வெங்கட்ராமன் |
| 7வது மாநாடு | 1962 அக். 29 நவ.4(சிறப்பு) | சென்னை | மணலி சி.கந்தசாமி |
| 8வது மாநாடு | 1964 | மதுரை | எம்.கல்யாணசுந்தரம் |
| 9வது மாநாடு | 1968 ஜன. 27-30 | வேலூர் | எம். கல்யாணசுந்தரம் |
| 10வது மாநாடு | 1971 செப். 9- 12 | திருச்சி | எம்.கல்யாணசுந்தரம் |
| 11வது மாநாடு | 1974 டிச.26-30 | சென்னை | எம்.கல்யாணசுந்தரம் |
| 12வது மாநாடு | 1978 மார்ச் 16-19 | கோவை | ப.மாணிக்கம் |
| 13வது மாநாடு | 1982 மார்ச் 3-7 | இராஜபாளையம் | ப.மாணிக்கம் |
| 14வது மாநாடு | 1986 பிப்.27 மார்ச் 2 | நெல்லை | ப.மாணிக்கம் |
| 15வது மாநாடு | 1989 பிப். 23-26 | திருச்சி | ப.மாணிக்கம் |
| 16வது மாநாடு | 1992 மார்ச் 4-7 | மதுரை | ஆர்.நல்லகண்ணு |
| 17வது மாநாடு | 1995 செப்.13-16 | சென்னை | ஆர் நல்லகண்ணு |
| 18வது மாநாடு | 1998 ஜூலை 24-26 | கடலூர் | ஆர்.நல்லகண்ணு |
| 19வது மாநாடு | 2002 மார்ச் 12-15 | தருமபுரி | ஆர்.நல்லகண்ணு |
| 20வதுமாநாடு | 2005 மார்ச் 5-8 | திருவாரூர் | தா.பாண்டியன் |
| 21வது மாநாடு | 2008 பிப்.29 மார்ச் 3 | புதுக்கோட்டை | தா.பாண்டியன் |
| 22வதுமாநாடு | 2012 பிப்.17-19 | இராஜபாளையம் | தா.பாண்டியன் |
| 23வதுமாநாடு | 2015 பிப்.25-28 | கோவை | இரா.முத்தரசன் |
| 24வதுமாநாடு | 2018 மார்ச் 28-31 | மன்னார்குடி | இரா.முத்தரசன் |
| 25வதுமாநாடு | 2022 ஆகஸ்ட் 6-9 | திருப்பூர் | இரா.முத்தரசன் |

**கான்பூர் நகரில் 1925 டிசம்பர் 26ம் நாள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு மாநாடு நடந்தது. அதற்கு மா.சிங்காரவேலர் தலைமை தாங்கினார். அவர்தான் தமிழகத்தில் முதலில் தொழிற்சங்கங்களைத் தொடங்கியவர். பொதுவுடைமைக் கருத்துக்களை சிறுபிரசுரங்களாக வெளியிட்டவர், தன்னை 'கம்யூனிஸ்ட்' என்று காங்கிரஸ் மாநாட்டிலேயே அறிவித்துக் கொண்டவர்.**

### அமீர் ஜதர்கான்

ஆனாலும் அமீர் ஜதர்கானின் வருகைக்குப் பிறகுதான் தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு வடிவில் உருக்கொண்டது. பாகிஸ்தானிலுள்ள ராவல்பிண்டிக்கு அருகிலுள்ள சிறு கிராமத்தில் பிறந்து, புரட்சிகரக் கொள்கைகளை மனதில் இருத்தி, உலக நாடுகள் பலவற்றிற்கும் பயணம் செய்து இறுதியில் பம்பாய் வழியாக 1931ல் சென்னைக்கு வந்தார். கம்யூனிஸ்ட் கட்சியைத் தமிழகத்தில் கால்பதிக்கச் செய்யக் கடும் முயற்சிகளை மேற்கொண்டார். மொழியறியா இடத்திற்கு வந்து, காவல்துறைக்குக் கடுக்காய்க் கொடுத்துக் கொண்டே, தலை மறைவு வாழ்க்கை வாழ்ந்து, பல சிறந்த புரட்சியாளர்களைத் தேடிப்பிடித்து, கம்யூனிஸ்ட் கட்சியை சென்னையில் அமைப்பதில் அமீர் ஜதர்கான் வெற்றி பெற்றார்.

ரஷ்யா மாணிக்கத்தையும், அவரது சகோதரர் ராஜவடி வேலுவையும் சந்தித்தார். பாஷ்யம் என்ற ஆர்யா, பி.சுந்தரய்யா, கம்மம்பட்டி சத்தியநாராயணா, சி.எஸ்.சுப்பிரமணியம், வி.சுப்பையா போன்ற (அன்றைய) இளைஞர்களை ஈர்த்தெடுத்து, கம்யூனிசக் கொள்கைகளை விரிவாக எடுத்துரைத்து, அமைப்பை உருவாக்கினார். 1931ன் பிற்பகுதியிலிருந்து 1932 இடைப்பகுதி வரையிலும், பிறகு 1934 முதல் 1936 வரையிலும் சென்னையில் கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு ரீதியாகச் செயல்பட்டது. அக்காலங்களில் பாஷ்யம் என்ற ஆர்யா, சி.எஸ்.சுப்பிரமணியம், பி.சுந்தரய்யா ஆகியோர் அவ்வப்போது (செயலாளராகப் பொறுப்பேற்று செயல்புரிந்து வந்திருக்கின்றனர்.

பிறந்ததிலிருந்தே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியினரின் தாக்குதலுக்குள்ளாகி வந்ததால், வெளிப்படையாக பலகாலம் அமைப்புரீதியாக இயங்குவதில் சிக்கல் இருந்தது.

### பி.ராமமூர்த்தி (1952 - 53)

தோழர் பி.ராமமூர்த்தி 1952–53 காலங்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளராகப் பணியாற்றியிருக்கிறார்.

தஞ்சை மாவட்டத்தில் ஐதீக பிராமணக் குடும்பத்தில் பிறந்த ராமமூர்த்தி, புரட்சிகர வாலிபனாக வளர்ந்தார். விடுதலை இயக்கத்தில் முன்நின்ற காங்கிரஸ் கட்சியிலும், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியிலும் முனைப்பாகச் செயலாற்றி, கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். எஸ்.வி.காட்டேயின் வழி காட்டுதல்படி, ஜீவா, கே.முருகேசன், ஏ.எஸ்.கே., சி.எஸ்.சுப்பிரமணியம் ஆகியோருடன் சேர்ந்து தொழிற்சங்கங்களை உருவாக்கினார். 1940– 41ல் அரசு தொடுத்த சென்னை கம்யூனிஸ்ட் சதிவழக்கில் மோகன் குமாரமங்கலம், சி.எஸ்.சுப்பிரமணியம், சுப்பிரமணியசர்மா, உமாநாத், ஹனுமந்தராவ், கேரளியன் ஆகியோரோடு பி.ஆரும் சேர்க்கப்பட்டார். 4 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. நாட்டு விடுதலைக்குப்பின் முதல் பொதுத் தேர்தலில் சிறையிலிருந்து கொண்டே மதுரை தொகுதியிலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து சிறப்புறப் பணியாற்றினார்.

### எம்.ஆர்.வெங்கட்ராமன் (1953 - 1963)

1953ல் நடைபெற்ற மாநில மாநாட்டில் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் எம்.ஆர். வெங்கட்ராமன். சட்டம் பயின்று வழக்கறிஞராகத் தொழில் நடத்தியபோது இவரிடம் ஒரு வழக்கைக் கொண்டு வந்தார் தோழர் பி.சீனிவாசராவ். அப்போதிலிருந்து அவருடன் ஏற்பட்ட தொடர்பே எம்.ஆர்.வியை தீவிர அரசியலுக்குக் கொண்டு வந்தது. எஸ்.வி.காட்டேயின் தொடர்பும் வழிகாட்டுதலும் கிடைத்தது. காங்கிரஸ், காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சிகளில் பணியாற்றி, 1939ல் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். 1940ல் கைது செய்யப்பட்டார். 1943ல் கட்சியின் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மோகன் குமாரமங்கலம் பம்பாய் மத்தியக் கமிட்டி அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டுக் கொண்டதால், தமிழ் மாநிலச் செயலாளராக எம்.ஆர்.வி., பொறுப்பேற்றுக் கொண்டார். 1946 டிசம்பரில் மதுரை சதிவழக்கில் கைது செய்யப்பட்டார். 1947 ஜனவரியில் விடுவிக்கப்பட்ட அவர் மீண்டும் 1948ல் கைது செய்யப்பட்டு சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தார். தமிழ்நாடு எனப் பெயர் மாற்றக் கோரிய போராட்டத்திற்கு ஜீவா, ம.பொ.சி.யுடன் தலைமை தாங்கிச் சென்று மிருகத்தனமாகத் தாக்கப்பட்டார். தனது அண்ணன் மகன் இசை இயக்குனர் எம்.பி.சீனிவாசனையும், நோபல் பரிசு பெற்ற தனது சித்தப்பா, சர்.சி.வி.ராமனின் மகன் சந்திரசேகரையும் கம்யூனிஸ்டுகளாக்கினார். 1964ல் கட்சி பிரிந்தபோது மார்க்சிஸ்ட் கட்சியில் தொடர்ந்து பணியாற்றினார்.

### மணலி கந்தசாமி (1963-1968)

திருத்துறைப்பூண்டி அருகிலுள்ள மணலி என்ற கிராமத்தில் பிறந்த சி.கந்தசாமி, 1940ல் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். தஞ்சை மாவட்ட விவசாயிகளால் பெரிதும் நேசிக்கப்பட்ட அவர், தஞ்சை மாவட்ட நிலச் சுவான்தார்கள் அனைவருக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கினார். 1948ல் கம்யூனிஸ்ட்டுகள் மீது அரசு அடக்குமுறையை ஏவிவிட்ட போது, தலைமறைவாக இருந்து தஞ்சை மாவட்டத்தில் கட்சியையும், விவசாயச் சங்கத்தையும் நடத்தி வந்தார். 1952 பொதுத் தேர்தலின்போது, தலைமறைவாக இருந்தபடியே சட்டமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றார். தலைமறைவுக் காலத்தில் அவர் தலைக்குப் பல்லாயிரம் பரிசு வைத்தது அரசு. ஆனாலும் பிடிக்க முடியவில்லை. பி.சீனிவாசராவோடு இணைந்து விவசாய இயக்கங்களை நடத்திய மணலி கந்தசாமி தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1963ம் ஆண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### எம்.கல்யாணசுந்தரம் (1968-1978)

தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்களின் ஒப்புயர்வற்ற தலைவராக விளங்கியவர் தோழர் எம்.கல்யாணசுந்தரம். 1928ல் நடந்த ரயில்வே வேலைநிறுத்தமும், அதன் தொடர்பான வழக்குகளும் எம்.கே.வுக்கு ஆங்கிலேய ஆட்சியாளர்கள் மீது வெறுப்பை உண்டாக்கின. பொன்மலை ரயில்வே ஒர்க் ஷாப்பிலிருந்து ஈரோட்டிற்கு மாற்றலாகிப் போனபோது, அங்கு ஜீவா, ஏ.எஸ்.கே., பி.ஆர். ஆகியோருடன் தொடர்பு ஏற்பட்டது. கே.டி.ராஜூ, பி.எம்.சுப்பிரமணியம், பரமசிவம் ஆகியோருடன் சேர்ந்து ரயில்வே சங்கத்தைப் பலப்படுத்தினார். காங்கிரஸ் கட்சி தீவிர உறுப்பினராக இருந்த எம்.கே. 1939ல் தலைமறைவாகத் திருச்சி வந்த ஏ.கே.கோபாலனைச் சந்தித்தபின் கம்யூனிஸ்ட் ஆனார். எம்.கே., வேலையிலிருந்து நீக்கப்பட்டார் கைது செய்யப்பட்டார். சிறை மீண்டபின், ரயில்வே தொழிற்சங்கத்தை மேலும் வலுவுள்ளதாக்கி அதன் தலைவரானார். அனந்த நம்பியார் செயலாளராக இருந்தார். 1946 ஜூலை முதல் செப்டம்பர் வரை பிரசித்திபெற்ற ரயில்வே வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தினார்.

1947ல் நாடு விடுதலை அடைந்தபோது பாகிஸ்தான் எல்லை பிரதேசத்தில் ஏற்பட்ட வகுப்புக் கலவரங்களின்போது ரயில்வே தோழர்களை அனுப்பி தைரியமாக ரயில்களை இயக்கி இந்து, முஸ்லிம் அகதிகளைக் காப்பாற்ற உதவினார். 1948ம் ஆண்டு கட்சியின் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்ட காலத்தில் கட்சியின் மாநிலச் செயலாளராக இருந்தார். 1952 பொதுத் தேர்தலில் திருச்சியிலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டசபையில் ஜனநாயக முன்னணியின் துணைத் தலைவராக பணிபுரிந்தார். தமிழ்நாடு சட்டமன்றம், நாடாளுமன்றம், மாநிலங்களவை ஆகியவற்றின் உறுப்பினராகச் செயலாற்றிய எம்.கே., 1968ல் கட்சியின் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1978 வரை செயலாற்றினார். ஏ.எஸ்.கே... மறைவுக்குப் பின் ஹார்பர் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொழிற்சங்க வேலைகளை முன்னிட்டு

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 88 இதழ் 20

## திருடப்படும் தேர்தல்கள்

தேர்தல் ஆணையம் முழுதாக அம்பலப்பட்டு நிற்கிறது. ஆகஸ்ட் 7ஆம் தேதி ஊடகவியலாளர்களைச் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தேர்தல் ஆணையம் வெளியிட்ட வாக்காளர் பட்டியலைத் திரையிட்டு, அதில் காணப்படும் தில்லுமுல்லுகளைத் தோலுரித்துக் காட்டியிருக்கிறார்.

மத்திய பெங்களூரு நாடாளுமன்றத் தொகுதிக்குள் உள்ள மகாதேவபுரா என்ற சட்டப்பேரவைத் தொகுதியின் வாக்காளர் பட்டியல் அது. பத்துக்குப் பத்து அடி அளவுள்ள ஒரு அறையில், 80 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருப்பது, வீட்டு எண் ‘0’ என்று ஏராளமான வாக்காளர்கள் இடம்பெற்றிருப்பது, ஒரு பெயர் பல முகவரிகளில் இருப்பது, இல்லாத முகவரிகளில் பலரது பெயர் சேர்க்கப்பட்டிருப்பது போன்ற வழிகளில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட போலி வாக்காளர்கள் சென்ற தேர்தலில் வாக்களித்திருக்கிறார்கள் என்று சான்றுகளோடு நிறுவியிருக்கிறார்.

இந்தியா டுடே போன்ற முக்கிய ஊடகங்கள் சில, அந்த முகவரிகளுக்குச் சென்று அவர் சொல்லியிருப்பது உண்மை என்று உறுதி செய்திருக்கின்றன.

ஒரே ஒரு சட்டமன்றத் தொகுதியை மட்டும், முழுதாக ஆய்வு செய்ய ஆறு மாத காலமானது. இதுதான் இந்தியா முழுமையும் நடக்கிறது, தேர்தலையே திருடுகிறார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

அரசியல் சாசனத்தின்படி உருவாக்கப்பட்டு இருக்கிற, தன்னிடம் வாக்கு பெற்றவர்கள்தான் நாட்டில் ஆட்சி செலுத்துகிறார்கள் என்ற நம்பிக்கையை மக்களுக்குத் தர வேண்டிய, சுயேச்சைத்தன்மை கொண்ட தேர்தல் ஆணையம் இதற்கு முறையாகப் பதிலளித்திருக்க வேண்டும். ஒருவேளை அவை உண்மையான தகவல்கள் அல்ல என்றால், தனக்குள்ள ஏராளமான வசதிகளைக் கொண்டு நிரூபித்திருக்க வேண்டும்.

ஆனால், ராகுல் காந்தி சொன்னவற்றை எழுதி பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்து, அதற்கு அவர் பொறுப்பு ஏற்பதாக ஒத்துக் கொண்டு கையெழுத்திட்டுத் தரவேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்கிறது. ஒரு எதிர்க்கட்சித் தலைவர், மக்களின் பிரதிநிதியாய், ஒரு நியாயமான கேள்வியை முன்வைக்கும் போது, அவரைத் தனிநபராகப் பிரித்து, அச்சுறுத்துவதற்கு முயற்சிக்கிற தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கை பெரும் கண்டனத்துக்குரியது.

விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடக்க இருக்கிற பீகார் மாநிலத்தில், சிறப்பு மறுசீராய்வு என்ற பெயரில் 65 லட்சம் வாக்காளர்களைத் தேர்தல் ஆணையம் நீக்கியிருக்கிறது.

ஜூன் 24 முதல் ஜூலை 27 வரை, ஒரு மாத காலத்திற்குள், 7.89 கோடி வாக்காளர்களை நேரில் ஆய்வு செய்து, இந்த முடிவு எடுக்கப்பட்டதாம்!

நீக்கப்பட்டவர்களின் பெயர்களை உச்ச நீதிமன்றம் கேட்கும்போது, அவ்வாறு கொடுக்க வேண்டும் என்று மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தில் இடமில்லை. ஏற்கெனவே வரைவுப் பட்டியலை அரசியல் கட்சிகளுக்குக் கொடுத்திருக்கிறோம் என்று ஆணையம் ஆணவத்துடன் பதில் அளிக்கிறது.

மேலும் செப்டம்பர் 1ஆம் தேதிக்குள், தமது பெயர் நீக்கப்பட்ட வாக்காளர்கள் உரிய வகையில் மனுச் செய்து பட்டியலில் பெயரைச் சேர்த்துக் கொள்ள இடம் இருப்பதாகவும் சொல்கிறது.

அதாவது ஒரு வாக்காளர் தன்னை இந்தியக் குடிமகன் என்று நிரூபிக்க வேண்டும். அதற்கு தேர்தல் ஆணையமே கொடுத்துள்ள வாக்காளர் அட்டை, ஒன்றிய அரசு தந்துள்ள ஆதார் அட்டை, மாநில அரசு தந்துள்ள ரேஷன் அட்டை ஆகிய எதையும் சான்றாக தேர்தல் ஆணையம் எடுத்துக் கொள்ளாது. பின்னர் எப்படி நிரூபிப்பது?

இந்தியாவிலேயே கல்வி அறிவு குறைந்த, அதிக ஏழை மக்களைக் கொண்ட பீகார் மாநிலத்தில், படிவங்களை நிரப்பி ஆன்லைன் வழியாக தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பச் சொன்னால் அவர்களால் எவ்வாறு அனுப்ப முடியும்?

முஸ்லிம்கள் அடர்த்தி மிக்க மாவட்டங்களில்தான் மிக அதிக வாக்காளர்கள் நீக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. யாரெல்லாம் பாஜகவுக்கு வாக்களிக்க மாட்டார்களோ, அவர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு, வாக்களிக்க முடியாமல் தடுக்கப்படுகிறார்கள் என்று எதிர்க்கட்சிகள் கூறுவதை யாரால் நிராகரிக்க முடியும்?

தேர்தல் ஆணையத்துக்கு ஊர்வலமாகச் சென்ற எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 300 நாடாளுமன்ற உறுப்பினர்களை, தடுப்பரண் வைத்து மறித்துக் கைது செய்திருக்கிறது ஒன்றிய அரசின் கீழ் உள்ள டெல்லிக் காவல்துறை.

அச்சமே இன்றி ஜனநாயகம் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு, மக்கள் ஒன்றுபட்டு எழுதல் வேண்டும்.

# இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு உலக கம்யூனிஸ்டுகளின் பங்களிப்பு

**பாட்டாளி வர்க்கம் தன் தேசத்தில் நின்றபடி அனைத்துத் தேசங்களின் தொழிலாளர்களோடு இணைந்து அவர்களின் விடுதலைக்காகப் போராடும் கொள்கை வழி தோழமைதான் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் கூறு என்றார்கள் மார்க்ஸ் ஏங்கல்சும்.**



மு.வீரபாண்டியன்

இத்திசை வழியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 1925 இல் இருந்து இதுநாள் வரை உலகின் அனைத்துத் தேசங்களின் தொழிலாளி வர்க்க இயக்கங்களோடு தோழமை தொடர்பில் இருக்கிறது.

அது விடுதலை இயக்கங்களை ஆதரித்து வந்துள்ளது. தென்னாப்பிரிக்க விடுதலை வியட்நாம் விடுதலை, சீனா விடுதலைப் போராட்டங்கள் கியூபாவின் விடுதலைப் போர் எனத் துவங்கி இன்றுவரை பாலஸ்தீன விடுதலைப் போர் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி விடுதலைப் போராட்டங்களை ஆதரித்தே வந்துள்ளது. இது இந்திய விடுதலை இயக்க சரித்திரம். ஆனால் இந்திய விடுதலைக்கு உலக கம்யூனிஸ்டுகளின் பங்களிப்பு கணிசமானது. அவை முழுமையாக வெளிவரவில்லை.

இந்தியா பிரிட்டிஷ் காலனியில் இருந்த போதே பிரிட்டிஷ் காலனியில் விடுதலை கரு கொண்டிருப்பதை முன் அறிந்து கூறியவர் மாமேதை காரல் மார்க்ஸ்.

வீரத் தெலுங்கானா போராட்டம், கேரளாவின் புன்னபுரா வயலார் போராட்டம், வங்கத்தின் தெபாக போராட்டம் மகாராஷ்டிராவின் வார்லி கிளர்ச்சி, ஒரிசாவில் நிலமலையின் ஆயுதப் போர் வேலூர் சிப்பாய்க் கலகம் எனும் விடுதலைப் போர், ராயல் கப்பற்படை எழுச்சி இவை அனைத்தையும் ஆதரித்து வரவேற்று கட்சி அணிகளுக்கு சீனத் தலைவர் சுட்டிக் காட்டினார்கள்.

1947 இல் இந்தியா விடுதலை அடைந்தது. 1949 இல் தான் சீனா விடுதலை அடைந்தது. நாடு விடுதலை அடைந்த உடனேயே பிரிட்டிஷ் காலனியின் மிக வலுவான கன்னி விழுந்தது. இன்றைய விடுதலைப் போர் சீன விடுதலைப் போரை உந்தித் தள்ளும் என முன்னறிவிப்பு செய்தவர் லியோ சோஷி.

போராட்டங்கள் தொடர்ந்த சூழலிலும் கூட இந்திய விடுதலையை உடனடியாக அங்கீகரித்த நாடு சீனா.

அந்தத் தருணத்தில் கூட இந்திய விடுதலையை அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகள் அங்கீகரிக்கவில்லை. சீனா உடனே அங்கீகரித்தது.

நெல்சன் மண்டேலாவின் ஏஎன்எல் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ். காந்தி துவக்கிய நேட்டால் காங்கிரஸ். தென்னாப்பிரிக்க கம்யூனிஸ்ட் கட்சி. இம்மூன்று கட்சியும் 1944 இல் இணைந்து இந்திய விடுதலைக்கான தீர்மானங்களை நிறைவேற்றியது.

மண்டேலா வால்டர் சிசுலூ, மபுடு, ஜூலி அரோரே என பல கம்யூனிஸ்ட் தலைவர்கள் இந்திய விடுதலை இயக்கத்தோடு தொடர்பில் இருந்தனர்.

பிரிட்டன் அமெரிக்காவில் நேரடிச் சந்திப்பில் ஈடுபட்டனர். சக்லத்வாலா உள்ளிட்ட மாணவர் தலைவர்கள் இந்திய விடுதலை இயக்கத் தலைவர்களுக்கும் தென்னாப்பிரிக்க விடுதலை இயக்கத் தலைவர்களுக்கும் இடையே ஆலோசனை செய்தனர்.

ஆப்கன் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. ஆப்கன் வழியாகத்தான் சுபாஷ் சந்திர போஸ் ராகுல்ஜி போன்ற விடுதலை வீரர்கள் எல்லை கடந்தனர். அவர்கள் ரஷ்யா செல்ல ஆப்கன் கம்யூனிஸ்ட் குழுக்கள் உதவின.




லண்டனில் பேபியன் கிளப்பில் நேரு அங்கத்தினர். அங்கு சோசியலிஸ்ட் ஆர்வலர்கள் கூடுவது வழக்கம். அங்கு இந்திய விடுதலைக் குழுக்களை ஆரம்பித்ததில் லண்டன் கம்யூனிஸ்டுகளுக்கு முக்கியப் பங்கு இருந்தது. நேரு நினைவுகூர்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

1949 இரண்டாவது படுகொலை என இந்தோனேசியாவில் குறிப்பிடப்பட்ட கம்யூனிஸ்டுகள் மீதான படுகொலைகள் உலகறியும்.

இந்தோனேசியத் தலைவர் ஐதிக் படுகொலை செய்யப்பட்டார். அவரது படுகொலைக்கு முன் அவரது இந்திய விடுதலைக் கட்டுரைகள், தலை மறைவுப் பிரதிகளில் வெளியானது.

ஜெர்மன் புச்சன் வாக் இது ஜெர்மன் சித்ரவதை முகாம் இங்குதான் புகழ்வாய்ந்த தாஸ்மன் அடைக்கப்பட்டிருந்தான். இந்த மாபெரும் கம்யூனிஸ்ட் அங்கேயே தூக்கிலிடப்பட்டார்.

அவரது இறுதிக்காலக் கட்டுரைகள் கிழக்கு உலகின் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இந்தியா தென்னாப்பிரிக்கா, வியட்நாம் பற்றியது.

‘ஹோசிமின்’ இந்திய வருகையின் போதும் நேரு வியட்நாம் சென்றபோதும் இருமுறை ஹோசிமின் நேரு கூட்டறிகை வெளியானது. இதில் வியட்நாம் கம்யூனிஸ்டுகள் இந்திய விடுதலைக்குத் தெரிவித்த ஆதரவு குறிப்பிடத்தக்கது.

கியூபாவில் 1959 இல் புரட்சி வெற்றி பெற்றது. இதனை அமெரிக்கா அங்கீகரிக்கவில்லை, இந்தியா அங்கீகரித்தது.

இந்தியாவை ஐநாவில் பாதுகாப்பு சபையில் இணைக்க கியூபா வலியுறுத்தியது. அன்றும் இன்றும் என்றும் உலக கம்யூனிஸ்ட் இயக்கம் இந்திய விடுதலையை – இந்தியாவை ஆதரித்தே வந்துள்ளது.

## தமிழ்நாடு மாநிலச் செயலாளர்கள் 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

டெல்லி சென்றிருந்தபோது 1998 ஜூன் 20 அன்று மாரடைப்பால் காலமானார்.

### ப.மாணிக்கம் (1978-1992)

தஞ்சை மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட தோழர் ப.மாணிக்கம், கடலூரில் வளர்ந்தார், அண்ணாமலைப் பல்கலையில் பயிலும்போதே மாணவர் தலைவராக விளங்கினார், அப்போதே அரசியலில் ஆர்வம் கொண்டு சோசலிஸ்ட் கட்சியுடன் தொடர்பு கொண்டார். நெல்லிக் குப்பத்தில் அடிக்கடி நடந்த ஜீவாவின் சொற்பொழிவுகளைத் தவறாது கேட்டுவந்தார். அண்ணாமலையில் பயிலும்போது 1941ல் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். எம்.ஆர்.வி., சங்கரய்யா, என்.கே.கிருஷ்ணன் ஆகியோரின் அரசியல் வகுப்புகளில் 1942 – 43களில் கலந்து கொண்டதன் விளைவாக மாணவர் சங்கத்தின் முழுநேர அமைப்பாளரானார். மதுரை, ராமநாதபுரம், நெல்லை மாணவர் அமைப்புகளின் பொறுப்பினை ஏற்றார். 1945க்குப் பின் மாநில மாணவர் சங்கத்தின் பொதுச் செயலாளரானார். பிறகு பாலன் வேண்டுகோளின்படி நெல்லை மாவட்ட கட்சி அமைப்பாளரானார். 1946 கடைசியில் மதுரை சதிவழக்கில் சேர்க்கப்பட்டு, விடுவிக்கப்பட்டார். சிறைமீண்ட பின் கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளரானார். 1950ல் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டார். நெல்லை சதிவழக்கிலும் சேர்க்கப்பட்டார். 1953ல் விடுதலையானபின் மீண்டும் கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளரானார். 1978ல் கட்சியின் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1992 வரை அப்பொறுப்பில் இருந்தார். தமிழ்நாடு சட்ட மேலவை உறுப்பினராகவும் பணிபுரிந்தார்.

### ஆர்.நல்லகண்ணு (1992 - 2005)

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தோற்றுவிக்கப்பட்ட 1925 டிசம்பர் 26 அன்று நெல்லை மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்தவர் தோழர் ஆர்.நல்லகண்ணு. தமிழ்ப் புலவருக்கான பி.ஓ.எல். படிப்பை அரசியல் வேலை காரணமாக இடையில் நிறுத்திவிட்டார். பள்ளியில் படிக்கும்போதே ஆசிரியர் பலவேசம் செட்டியார் மூலம் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்பு ஏற்பட்டது. 1944ல் ஸ்ரீவைகுண்டம் கட்சிக் கிளையில் உறுப்பினரானார். மதுரையில் நடந்த சென்னை மாநிலத் தொழிற்சங்க மாநாட்டில் பேசிய ஜீவாவின் சொற்பொழிவு இவருக்கு மிகுந்த ஊக்கமளித்தது. பின் நா.வானமாமலை, என்.டி.வானமாமலை, வி.மீனாட்சிநாதன், ப.மாணிக்கம் ஆகியோரைச் சந்தித்தார். சென்னைக்கு வந்து ஜனசக்தி செய்திக்குழுவில் பணியாற்றினார். பிறகு நாங்குநேரி தாலுகாவிற்கு விவசாயச் சங்கப் பணியாற்றச் சென்றார். விவசாயிகளுக்கு ஆதரவாக ஜியர் மடங்களை எதிர்த்துப் போராட்டம் நடத்தினார். நாங்குநேரி பகுதியில் மக்கள் பிரச்சினைகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு போராடினார். 1948ல் கட்சி தடை செய்யப்பட்ட போது தலைமறைவானார். பிறகு நெல்லைச் சதிவழக்கில் சேர்க்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார். 1956ல் விடுதலையானார். தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், விவசாயத் தொழிலாளர் சங்கங்களில் முக்கியப் பொறுப்பேற்று பணியாற்றினார். அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1992 ஏப்ரலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளராகத் தேர்வு பெற்று 2005ம் ஆண்டு வரை திறம்படப் பணியாற்றினார்.

### தா.பாண்டியன் (2005-2015)

மதுரை மாவட்டம் உசிலம்பட்டிக்கு அருகிலுள்ள வெள்ளைமலைப்பட்டி கிராமத்தில் 1932 மே 18 அன்று பிறந்தார். இவர் பள்ளியில் படித்த காலத்திலேயே, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் படித்து வந்த அண்ணன் தா.செல்லப்பா மூலம் உலக விவகாரங்களை அறிந்து கம்யூனிஸ்ட் கட்சியின்பால் ஈர்க்கப்பட்டார். 1948ல் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்திலேயே, உசிலம்பட்டியில் இளைஞர்களைத் திரட்டி கட்சிப் பணிகளைப் பயமில்லாமல் செய்து கொண்டிருந்தார். பிறகு காரைக்குடி அழகப்பா கல்லூரியில் படித்தபோது ஆர்.ஹெச்.நாதன், எஸ்.நாராயணன் ஆகிய தலைவர்கள் மூலம் கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பற்றி விரிவாக அறிந்து கொண்டார். 1953ல் கட்சியில் சேர்ந்தார். அப்போது சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஜீவா, கம்பன் விழாக் கூட்டங்களுக்கும், அரசியல் கூட்டங்களுக்கும் அடிக்கடி காரைக்குடி வருவார். அவருடன் நெருங்கிய தொடர்பு கிடைத்தது. கல்லூரியில் பட்டப்படிப்பு படிக்கிறபோது, கல்லூரி மாணவர் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பட்டம் பெற்றதும் அக்கல்லூரியிலேயே 4 ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றினார். தோழர் தா.பா.வின் இலக்கிய ஆர்வத்தையும் அரசியல் ஆழத்தையும் உற்று நோக்கிய ஜீவா, அவரை முழுநேரக் கட்சிப் பணிக்கு ஈர்த்தார். 60களின் தொடக்கத்தில் சட்டம் பயின்ற தா.பா.. அன்றைக்கு இருந்த அரசியல் சூழ்நிலையில் தமிழகம் முழுவதும் சுற்றிச் சுழன்று கட்சிப் பணியாற்றினார். ஜீவா தொடங்கிய தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றுச் செயலாற்றினார். ஜனசக்தியில் ஆசிரியர் குழுவிலும் இணைந்து பணிபுரிந்தார். தமிழகத்தின் அனைத்துப் பட்டி தொட்டிகளிலும், கல்வி நிலையங்களிலும் அரசியல் சொற் பொழிவுகள், இலக்கியப் பேருரைகள் நிகழ்த்தியிருக்கிறார். இரண்டு முறை நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் 2005ம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டுவரை கட்சியின் மாநிலச் செயலாளராகச் செயல்பட்டார்.

### இரா.முத்தரசன் (2015 முதல்)

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், ஆலிவலம் எனும் குக்கிராமத்தில் இராமசாமி மாரிமுத்து தம்பதியின் மூன்றாவது குழந்தையாய் 18.1.1950ல் பிறந்தார் இரா. முத்தரசன்.

அப்பா சிறு விவசாயி. காவிரிப் படுகையில் சிறு வயதிலேயே சேற்றில் இறங்கி வேலை பார்த்தவர் முத்தரசன்.

அன்று அவரது ஊரில் பள்ளி இல்லை. பொன்னிறை கிராமத்தில் உள்ள தனியார் பள்ளியிலும், ஆலத்தம்பாடி ஜானகி உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி கற்றார்.

1965ல் இந்தித் திணிப்பை எதிர்த்த போராட்டம் தமிழ்நாட்டு மாணவர்களிடையே தீயாய்ப் பரவியது. பள்ளிக்கு அருகிலிருந்த ரயில், தபால் நிலைய பெயர்ப் பலகைகளிலிருந்த இந்தி எழுத்துகளை அழிக்கும் போராட்டத்தில் முத்தரசனும் பங்கேற்றார். இதன் தொடர்ச்சியாக கிராமத்தில் காந்தி மக்கள் மன்றத்தைத் முத்தரசன் துவக்கி, கிராமத்து இளைஞர்களுடன் சேர்ந்து கொண்டு குளம், வாய்க்கால்களை மராமத்து செய்தார். தூய்மைப் பணியையும் ஒருங்கிணைத்தார்.

ஆலிவலத்துக்கு ஜனசக்தி இதழ் வந்து கொண்டிருந்தது. டீக்கடையில் இருப்பவர்களிடம் அதனைச் சத்தமாகப் படித்துக் காட்டும் பொறுப்பை முத்தரசனிடம் ஒப்படைத்தார் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளைச் செயலாளரான கோவிந்தராஜ். அதில் முத்தரசன் காட்டிய ஈடுபாட்டைப் பார்த்துத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் இயக்கம் சம்பந்தமான புத்தகங்களை அவருக்குத் தந்து வாசிக்க வைத்தார்.

எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது, அவருக்கு அம்மை நோய் கண்டது. அதோடு பள்ளிப் படிப்பும் பறிபோனது.

கோவிந்தராஜ், அவரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருத்துறைப்பூண்டி ஒன்றிய அலுவலக உதவியாளராகச் சேர்த்துவிட்டார்.

1969ல் 18 வயதானதும், கட்சியின் பயிற்சி உறுப்பினராகச் சேர்ந்து, ஆறு மாதப் பயிற்சிக்குப் பின் கட்சி உறுப்பினராக்கப்பட்டார்.

முத்தரசன் உறுப்பினரான நேரத்தில், கீழவெண்மணி பிரச்சினை உச்சத்தில் இருந்தது. அந்தச் சம்பவம் குறித்து விசாரித்த கணபதியா பிள்ளை ஆணையத்தின் பரிந்துரைகளில், "அரசுத் துறையில் கடைநிலை ஊழியருக்குக் கிடைக்கிற ஊதியமாவது, விவசாயத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் வகையில் கூலி நிர்ணயம் செய்ய வேண்டும்" என்பது முக்கியமானது. அதை நடைமுறைப்படுத்தக் கோரி 1969ல் தாலுகா அலுவலகம் முன்பு நடந்த போராட்டத்தில் பங்கேற்றுக் கைதான 5,000 பேரில் முத்தரசனும் ஒருவர். தோழர்களுடன் திருச்சி சிறையில் இருந்த ஒரு மாத காலமும் அவரை மேலும் செதுக்கியது.

1970 ஆகஸ்ட்டில் தமிழகம் முழுவதும் நில மீட்சிப் போராட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்தது. நில உச்சவரம்புச் சட்டத்தை அமலாக்க வேண்டும் என்றும், வரம்புக்கு மீறி நிலம் வைத்திருக்கும் நிலச்சுவான்தார்களிடமிருந்து உபரி நிலத்தைக் கைப்பற்றி நிலமற்ற விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. நில முதலைகள் வைத்திருந்த உபரி நிலங்களில் இறங்கி செங்கொடி நாட்டுவது, நாற்று நடுவது என்பதே நிலமீட்சிப் போராட்டமாகும்.

இந்த இயக்கத்தை "இரும்புக் கரம் கொண்டு அடக்குவோம்" என்று அன்றைய ஆட்சி பிரகடனப்படுத்தியது. "இரும்புக் கரத்தை நொறுக்குவோம்" என்று கம்யூனிஸ்ட்டுகள் ஆர்ப்பரித்தனர். போராட்டம் துவங்குவதற்கு முன்பாகவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, தமிழ்நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கான கம்யூனிஸ்ட்கள் கைது செய்யப்பட்டார்கள்.

காவல்துறையின் கைகளுக்குச் சிக்காமல் மறைந்திருந்து, குறித்த நாளில் தடையை மீறி 300 பேருடன் சென்று நெடும்பலம் சாமியப்ப முதலியாரின் நிலத்தில் செங்கொடியை நாட்டிக் கைதானார் முத்தரசன். மீண்டும் சிறைவாசம்.

1970ல் கட்சியின் திருத்துறைப்பூண்டி நகரக் குழுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் முத்தரசன். ஒன்றிய துணைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர், செயற்குழு உறுப்பினர், பொருளாளர் என்று அடுத்தடுத்த மாநாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்.

1984ல் விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் தஞ்சை மாவட்டச் செயலாளராக அவர் தேர்வு செய்யப்பட்டார். 1997ல் திருவாரூரில் நடந்த அச்சங்கத்தின் மாநில மாநாட்டில், மாநிலச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டு, 17 ஆண்டுகள் அப்பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றினார்.

மாநில மாநாட்டில் அன்றைய முதல்வராக இருந்த கலைஞர் பங்கேற்றுப் பொதுக்கூட்டத்தில் பேசினார். அப்போது, தமிழ்நாடு அரசு, விவசாயத் தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பை வழங்குவதற்காக, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை உருவாக்குவதாகவும், அதன் உறுப்பினராக இரா.முத்தரசனை நியமிப்பதாகவும் அறிவித்தார். அந்தப் பொறுப்பிலும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டார்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் ஒரே ஒரு முறை 2001ல் வேதாரண்யம் தொகுதியில் இருந்து போட்டியிட்டு, வெற்றி வாய்ப்பை இழந்தார்.

ஆனால், காவிரிப் படுகை மாவட்டங்களில் அனைத்து நாடாளுமன்ற, சட்டப்பேரவைத் தேர்தல்களிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதிகளுக்குத் தேர்தல் பொறுப்பாளராகப் பணியாற்றி அனுபவம் பெற்றவர்.

மாநில மையத்திலிருந்து செயல்படுவதற்காக அவர் செயற்குழு உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். வெவ்வேறு மாவட்டங்களுக்கு அவர் மாநிலப் பொறுப்பாளராகச் செயல்பட்டிருக்கிறார். ஜனசக்தி நிர்வாகப் பொறுப்பிலும் சில ஆண்டுகள் இருந்துள்ளார்.

2015 கோவையில் நடந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 23வது மாநில மாநாட்டில், இரா.முத்தரசன் கட்சியின் மாநிலச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். பின்னர் மன்னார்குடியிலும் அதையடுத்து திருப்பூரிலும் நடந்த மாநில மாநாடுகளில் அவர் ஒரு மனதாக மீண்டும் மாநிலச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்.

மக்கள் நலக் கூட்டணியை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்தவர் அவர். ஒன்றிய ஆட்சியை ஆர்எஸ்எஸ் பாஜக கைப்பற்றிய பின்பு, தனது பாசிசக் கொள்கைகளை அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு எதிராக இந்தியாவில் அமலாக்கப் பெரும் முயற்சி எடுத்த சூழலில், அதற்கு எதிரான அணியை தமிழ்நாட்டில் வலுவாக அமைக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்தது.

அதன்படி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை திமுக தலைமையில் கட்டுவதற்குப் பெரும் பங்களிப்புச் செய்தவர் முத்தரசன்.

எட்டாம்வகுப்புமட்டுமேபடித்திருந்தாலும், அவர் நல்ல எழுத்தாளரும் கூட. விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சமூகப் பிரச்சனைகள் குறித்து ஜனசக்தியில் 'கிராமத்தான்' என்ற பெயரில் பல கட்டுரைகளை அவர் எழுதியிருக்கிறார். அண்மை ஆண்டுகளில், ஜனசக்தியில் 'கட்சிக் கடிதம்' என்ற தலைப்பில் தொடர்ந்து கட்சித் தோழர்களோடு உயிரோட்டமான முறையில் உரையாடும் வகையில் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதுகிறார்.

அவரது மனைவி பங்கஜம், சமூக நலத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்றவர். மகன் ஜீவானந்தம், மகள் சுகன்யா.

## ஜனசக்திக்கு உண்டியல் நிதியை வழங்கிய 4ஆம் வகுப்பு மாணவி ஹரி லெட்சிகா




◆ திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூரைச் சேர்ந்த லெட்சுமணன் அவர்களின் மகள் ஹரி லெட்சிகா நான்காம் வகுப்பு படிக்கிறார். அவர் தனது உண்டியலில் சேர்த்து வைத்திருந்த 508 ரூபாய் 50 காசுகளை ஜனசக்தி நிதிக்காக மாநிலச் செயலாளர் இரா.முத்தரசனிடம் வழங்கினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு
26 ஆவது மாநில மாநாடு
2025 ஆகஸ்ட் 15 16 17 18 சேலம்

# இந்திய விடுதலைப் போரில் பெண்கள்

**இந்திய விடுதலை நாளில் அனைவருக்கும் சுதந்திர தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இந்தியாவில் வியாபாரம் செய்வதற்காக வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவின் இயற்கை வளங்களைக் கொள்ளையடித்துக் கபளீகரம் செய்ய முடிவு எடுத்து இந்தியாவை அடிமைப்படுத்தி ஆட்சியைப் பிடிக்க நினைத்தது.

இந்தியா சமஸ்தானங்களாகப் பிரிந்து கிடந்தது. குறுநில மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர். சாதியக் கட்டமைப்பு இறுகிக் கிடந்தது. இந்த நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திச் சூழ்ச்சி செய்து பிரிவினையைத் தூண்டி மன்னர்களைத் தனக்கு அடிமையாக்கினால் மக்களை அடிமைப்படுத்தி விடலாம் எனத் திட்டமிட்டுச் செயல்படுத்தியது.



கடலூர் அஞ்சலை வேலு நாச்சியார் குயிலி ருக்மணி லட்சுமி
மூவலூர் ராமாமிர்தம் கேப்டன் லட்சுமி சரஸ்வதி சுப்பையா மணலூர் மணியம்மை பார்வதி கிருஷ்ணன்

200 ஆண்டுகாலம் இந்தியாவில் ஆட்சி அதிகாரத்திலிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விரட்டி அடிக்கப் பல்வேறு போராட்டங்களை இந்திய மக்கள் ஒன்றுபட்டு நடத்தி வெற்றி கண்டார்கள். 1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் அன்று இந்தியா விடுதலை பெற்றது.

இந்திய நாட்டின் விடுதலைக்கான வீரம் செறிந்த போராட்டத்தில் அந்நியனை எதிர்த்து விடுதலை வேள்வியில் எண்ணற்ற வீரர்களை ஒடுக்குமுறை, அடக்குமுறைக்கு அஞ்சிடாது ரத்தம் சிந்தி, இன்னுயிர் ஈந்து தூக்குக் கயிற்றை முத்தமிட்டு குண்டாந்தடிகள் தாக்குதலை எதிர்கொண்டு சிறைக் கொட்டடிகளில் சித்ரவதைகளை அனுபவித்து துப்பாக்கிக் குண்டுகள் துளைத்து எடுத்த போதும் நெஞ்சுறுதியோடு எதிர்த்து நின்று போராடிய விடுதலைப் போராளிகளில் பெரும்பாலான பெண்களும் பங்கேற்றிருக்கிறார்கள்.

மகாத்மா காந்தியடிகளுக்குப் போராட்ட உணர்வைத் தூண்டியது. தில்லையாடி வள்ளியம்மை அவர்கள்தான் காந்தியடிகளின் சீடரானவர் நிவேதிதா அம்மையார். இந்திய விடுதலைக்காக காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கம், உப்பு சத்தியாகிரக இயக்கம் பிரிட்டிஷ் சாமான்களை பகிஷ்காரம் செய்தல் போன்ற இயக்கங்களுக்கு அறைகூவல் விடுத்த போது இந்த இயக்கங்களில் அதிகளவில் பெண்கள் பங்கு கொள்ள முன் வந்தார்கள்.

துப்பாக்கிச் சூடும் சிறைச்சாலையும் எங்களை என்ன செய்யும் என்று நிமிர்ந்து கேட்டார்கள். இந்தப் போராட்டங்களில் ஏராளமான பெண்கள் சிறைகளை நிரப்பினார்கள். தலைமையேற்ற சரோஜினி நாயுடு குறிப்பிடத்தக்கவர்.

இந்திய நாட்டின் விடுதலைக்கு ஆயுதமேந்திய பெண்களை வெள்ளை அரசு பயங்கரவாதிகள் என்று அழைத்தார்கள். புகழ்மிக்க சிட்டகாங் ஆயுதக் கிடங்கு போராட்டத் தாக்குதலில் துப்பாக்கிச் சூடு பட்டு உயிர்நீத்த தோழியர் பிரதிலதா வடேல் பெருமைக்குரியவராவார்.

இந்தப் போராட்டத்தில் 17 வயதான வங்கம் தந்த சிங்கம் கல்பனா தத் புரட்சிக் குழுவில் தன்னை இணைத்துக் கொண்டு துப்பாக்கி சுடும் பயிற்சி பெற்று தலைமறைவாய் இருந்து வெடிமருந்து செய்வதற்குத் தேவையான பொருட்களை வாங்கி வந்து வெடி மருந்து செய்து ஆயுதக் கிடங்கைத் தாக்கி அழித்தும் ஏராளமான ஆயுதங்களைக் கைப்பற்றினார். வெள்ளையர்களின் கண்ணில் விரல் விட்டு ஆட்டினார். கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. கல்பனாவை விடுதலை செய் என்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

இவரோடு பினதாஸ், சாந்தி, சுனிதி கோஷ், சுகாசினி, கங்குலி இன்னும் பலர் பங்கு பெற்று சிறை தண்டனை பெற்றவர்கள்.

1942ல் 'செய் அல்லது செத்துமடி' என்ற இயக்கத்தில் பல்லாயிரக்கணக்கான தாய்மார்கள் பங்கு பெற்று தியாகங்கள் செய்துள்ளனர். இவர்களில் முக்கியமானவர் அருணா ஆசப் அலி. 1942 ஆகஸ்ட் 8 அன்று வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை இந்திய தேசிய காங்கிரஸ் நிறைவேற்றியது. அடுத்த நாளான 9ஆம் தேதி திலகர் சிலைக்கு முன் கவாலியா மைதானத்தில் கொடியேற்றுவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. விடியும் முன்பே காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். அன்று மைதானத்தைப் போலீசார் சூழ்ந்திருந்தனர்.

காந்தியடிகள் அருணா ஆசப் அலியைக் கொடியேற்ற கட்டளையிட்டார். தலைமறைவாக இருந்த அருணா ஆசப் அலி காந்தியடிகள் கட்டளையை ஏற்றார். தோழர்களுடன் எங்கிருந்தோ புயல் போல் கொடியுடன் வந்தார். கொடியேற்றினார். இது விடுதலைப் போர் என்று கோஷமிட்டார். காவலர்கள் சுதாரிக்கு முன் மறைந்து விட்டார். தலைமறைவான அருணாவைப் பிடித்துக் கொடுப்பவருக்கு 5000 ரூபாய் பரிசு என ஆங்கிலேய அரசு அறிவித்தது.

மேற்குவங்கம் மிதுனாபுரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயத் தாய் மாதாங்கனி ஷக்ரா பிரிட்டிஷ் இராணுவக் குண்டுகள் தன்னை ஊடுருவிய போதும் தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்த வீராங்கனையாவார்.

வீரம், தொண்டு, எளிமை என்ற பண்புகளை ஒருங்கே கொண்டிருந்த அருணா ஆசப் அலி தலைமையில் நடைபெற்ற பிரம்மாண்டமான மாநாட்டில்தான் 1954 இல் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் தோன்றியது.

மாதர் இயக்கத்தின் முதல் ஸ்தாபனம் பிரிட்டிஷ்காரர்களின் ஆதரவுடன் பிறந்தது. தேசிய கவுன்சில் என்று அழைக்கப்பட்டது. இதனுடைய குறிக்கோள் சமூகச் சீர்திருத்தம் மூலம் மாதர்கள் உரிமையை அடைவது. ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரின் மனைவிமார்கள் இந்த அமைப்பின் தலைவராகப் பொறுப்பேற்றார்கள். தேவைப்பட்ட அளவு பணம் நன்கொடையாக வழங்குவார்கள். பள்ளிகள் நடத்துவது தையல் வகுப்புகள் நடத்துவது இதன் பணிகள். பிரிட்டிஷ் அரசிற்கு எதிராக ஒரு இயக்கமும் நடத்த விட மாட்டார்கள்.

இரண்டாவது அமைப்பு அகில இந்தியப் பெண்கள் மாநாடு. இந்த அமைப்பில் திருவாங்கூர் ராணி, மைசூர் பரோடா குவாலியர் மகாராணிகள் இடம் பெற்றிருந்தார்கள். இவர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் உறவு கூடாது என்றவர்கள்.

இதே சமயத்தில் இன்னொரு பகுதியாக தேசிய இயக்கத்திலிருந்து வந்த சரோஜினி நாயுடு, கமலாதேவி, சட்டோபாத்யாயா, ஜெயஸ்ரீ ராம்ஜி அருணா ஆசப் அலி போன்ற முற்போக்குச் சிந்தனையாளர்கள் இடம்பெற்றிருந்தார்கள். தேச விடுதலையை முன்வைத்தார்கள்.

1943 இல் வங்கத்தில் கொடும் பஞ்சம் ஏற்பட்டது. ஏராளமான பட்டினிச் சாவுகள் நடைபெற்றன. கிராமப்புறங்களில் பெண்கள் பட்டினிக் கொடுமையால் பரிதவித்த பெண்களை விவசாயத் தொழிலாளர்கள், ஆதிவாசிப் பெண்களைத் திரட்டிப் போராட்டங்களை நடத்தினார்கள். சட்டசபை முன்னால் மாபெரும் பட்டினி ஊர்வலம் நடைபெற்றது. பஞ்ச நிதி வசூல் செய்து கொடுத்தது.

அரிசி விநியோகிக்கவும், கஞ்சித் தொட்டிகளைத் திறக்கவும், ரேஷன் முறையைக் கொண்டு வரவும், குழந்தைகள் காப்பகம், மருத்துவ சிகிச்சை முகாம் இப்படி பல தீர்வுகளை அரசு செய்ய வேண்டும் எனப் போராடினார்கள்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் மாதர் இயக்கம் இந்து முஸ்லிம் ஒற்றுமை, தேசத் தலைவர்கள் விடுதலை என்ற முழக்கத்தை முன்வைத்துப் போராட்டங்களை நடத்தியது.

உலக வரலாற்றில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரில் ரோசா லக்சம்பர்க், கிளாரா ஜெட்கின், குரூப்ஸ் கயா, ஜென்னி ஜோன் ஆப் ஆர்க் போன்ற பல பெண்கள் போரில் பங்காற்றினார்கள்.

இந்திய வரலாற்றில் அருணா ஆசப் அலி, கல்பனா, கீதா முகர்ஜி, ரேணு சக்கரவர்த்தி, ஜான்சி ராணி, மீராபென், கார்கி தாரா ரெட்டி, தீன்பதக் மேடம் காமா வசந்தி தேபி வீரத்தாய் வித்யா தேவி எனப் பட்டியல் தொடரும்.

தமிழகத்திலும் வீரமங்கை வேலுநாச்சியார், குயிலி, பத்மாசினி, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, ருக்மணி லட்சுமிபதி, கேப்டன் லெட்சுமி, தில்லையாடிவள்ளியம்மை, மணலூர் மணியம்மை, மீனாட்சி சுந்தராம்பாள், பார்வதி கிருஷ்ணன், மீனா கிருஷ்ணசாமி, கடலூர் அஞ்சலை, சரஸ்வதி சுப்பையா, ஜனகம் இஸ்மாயில், இரதாபாய் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், அம்மா கண்ணு அம்புஜம், செங்கொடி காத்த சிகப்பி எனத் தொடரும் பட்டியல் ஏராளம் ஏராளம்.

சமூகத்தின் சரிபாதி பெண்களின் சமூக நீதி பாதுகாக்கப்படவும் மறைக்கப்பட்ட மாதர்களின் வாழ்வியல் வரலாறு மீட்கப்படவும் மனித உரிமைகளுக்கான போராட்டத்திலும் முன்வரிசை போர்க்கள இயக்கம் இந்திய மாதர் தேசிய சம்மேளனம். இந்திய விடுதலைப் போரில் எண்ணற்ற பெண்களை அர்ப்பணம் செய்துள்ளது. எண்ணற்ற தியாகிகளின் வழி நடப்போம், போராடிப் பெற்ற விடுதலை இந்தியாவைப் பாதுகாப்போம் வரலாறு படைப்போம் என இந்த சுதந்திர தின நாளில் சபதம் ஏற்போம்.



மு.கண்ணகி

**தொடர்புக்கு: 9442433177**

இந்திய விடுதலைப் போரில் பெண்கள்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு 26ஆவது மாநில மாநாடு
2025 ஆகஸ்ட் 15 16 17 18 சேலம்

# சமூக விடுதலையை முன்னெடுத்த விவசாயிகள் சங்கம்

சமூக விடுதலையை முன்னெடுத்த விவசாயிகள் சங்கம்

**மனித இனங்கள், குழு வாழ்முறையில், பொது உழைப்பின் வழியாக உற்பத்திக்குக் கொண்டு வந்த நிலங்களில், கூட்டு உற்பத்தியில் ஈடுபட்டுக் கிடைக்கும் விளைவைத் தங்களது வேண்டுதலுக்கு ஏற்பப் பகிர்ந்துகொண்ட நிலை உலகெங்கும் வாழ்முறையாக இருந்துவந்துள்ளது.**



நிலங்கள், உழைப்பு, விளைவு ஆகிய அனைத்தையும் பொதுவில் துய்த்துவந்த காலகட்டத்தில், மனிதரிடையே ஏற்றத்தாழ்வுகள் ஏற்படவில்லை. உழைப்பில் ஈடுபடாமல், உற்பத்தியில் மட்டும் பங்கு பெறுகின்ற நடைமுறை உருவானபோதுதான் சிக்கல்கள் தோன்றின. அடக்குமுறை, அடிமைப்படுத்தல், நிலங்களைப் பறித்தல், உரிமை மறுத்தல், கட்டுப்படுத்தல் போன்றவை அடுத்தடுத்து வந்தன.

இவற்றையெல்லாம் தாண்டி, உழைக்கும் மக்களின் பயன்பாட்டில் இருந்த நிலங்களை வல்லாண்மையில் எடுத்து ஆட்சியாளர்கள், அலுவலர்கள், படையினர், பார்ப்பனர் போன்றோர்க்குக் கொடையாக வழங்கும் நிலை அறிமுகமானபோது, நிலங்களில் இருந்த பயிரிடும் உரிமையும் குடிகளிடமிருந்து பறிக்கப்பட்டது. உடல் உழைப்பாளர்களாக மட்டும் அவர்களில் பெரும்பாலானோர் இழிவில் தள்ளப்பட்டனர்.

அய்ரோப்பாவில் நிலவிய அடிமை முறை தமிழ்நாட்டில் இல்லை என்றாலும், பல்லவர் காலத்தையொட்டி, சமூக உரிமைகள் பலவும் மறுக்கப்பட்டன.

இவற்றுக்கெல்லாம் மறுப்பாக, எழுச்சி என்று கூற முடியாவிட்டாலும், ஏற்றுக்கொள்ள இயலாத அன்றைய நிலையில், தங்களுடைய எதிர்ப்புணர்வுகளை உழைக்கும் மக்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர். வரி எதிர்ப்பு, வரி கொடாமை, குத்தகை அளவு மறுப்பு, நிலங்களிலிருந்து வெளியேறுதல், பயிரிடாமல் புறக்கணித்தல் என வெவ்வேறு வடிவங்களில் அவை நடந்தேறின. ஆனாலும், இயக்கமாக உருவாகும் அமைப்பு நிலை அன்று ஏற்படாததால் இவை ஆங்காங்கு முடக்கப்பட்டன அல்லது அடக்கப்பட்டன.

ஆயினும், உற்பத்திக்குத் துணையாக இருந்த கம்மாளர் போன்ற வினைத் தொழிலாளர் சிலருக்கு, ஒரு சில சமூக உரிமைகளை வழங்கவேண்டிய நிலைக்கு அன்றைய ஆட்சியாளர்கள் தள்ளப்பட்டனர்.

நன்மை தீமைகளுக்கு இரட்டைச் சங்கு ஊதிப் பேரிகை கொட்டவும், செல்லும் இடங்களுக்குக் காலணி அணியவும், தங்கள் இல்லங்களுக்குச் சுண்ணாம்பு பூசவும், இல்லத்துக்கு வாயில் கதவு அமைக்கவும், குடை பிடிக்கவும் உரிமைகள் தரப்பட்டுள்ளன என்று இடைக்காலக் கல்வெட்டுகள் பதிவு செய்துள்ளன. இத்தகைய எளிய உரிமைகள்கூட உழைக்கும் மக்களுக்கு மறுக்கப்பட்டிருப்பது ஒடுக்குமுறையின் அளவினைப் புரிந்துகொள்ள உதவும். மேலும், அடிப்படை உரிமைகள் பலவற்றையும் இழந்திருக்கின்ற நிலையே நீடித்திருந்தது என்பதும் தெரிகிறது.

சோழர் காலத்தையடுத்து, விசயநகர காலத்தில், தீண்டாமை கொடுமைகளும் சேர்ந்துகொண்டன. இவற்றின் தொடர்ச்சி ஆங்கில ஆட்சிக் காலத்திலும் பரவலாக நிலைத்துவிட்டது.

நிலவுடைமையினரின் மேலாண்மையில், நிலங்களில் நேரிடையாக உற்பத்தியில் ஈடுபட்டிருந்த குத்தகையாளரும் உடல் உழைப்பை மட்டும் நம்பி இருந்த உழைப்பாளரும் அடைந்து வந்த துயரங்களுக்கு எல்லைகளில்லை என்றே கூறிவிடலாம்.

கால அளவு இல்லாமலும் ஓய்வு கொள்ளாமலும் உழைப்புக்கு வேண்டிய உணவு கிடைக்காமலும் கீழ்நிலைப்படுத்தப்பட்ட மக்களுக்கு வாய் திறக்கும் வழிகூட வழங்கப்படவில்லை.

நிலவுடமையாளர்களின் முழுமையான கட்டுப்பாடுகளுக்குள் அடங்கி ஒடுங்கிக் கிடந்தார்கள் என்றுதான் கூறவேண்டும்.

எதிர்க்குரல்கள், எழுச்சிகள், போராட்டங்கள் என்ற வகையில் தமிழகமெங்கும் ஆங்காங்கு பல வெடிப்புகள் அவ்வப்போது வெளிப்பட்டிருந்தபோதிலும், உழைக்கும் வேளாண் மக்கள் மற்றும் உடல் உழைப்பாளர்களது உணர்வுகளை உள்வாங்கி, ஒன்றிணைத்துச் செயல்படக்கூடிய இயக்கங்களோ, அமைப்புகளோ, வழிகாட்டுதல்களோ அன்று ஏற்பட்டிருக்கவில்லை.

தாழ்நிலை என்பது உழைப்பினை நெருக்கிப் பெறுதல் என்பதோடு நின்றுவிடவில்லை. நடைமுறையில். சமூக உரிமைகளை மறுப்பதன் வழியாக, உழைப்பாளர் பலரை மனித நிலைக்கும் கீழாகக் கொண்டு சென்று, மனிதருக்கான உரிமைகளைப் பெறத் தகுதி இல்லாதோர் எனக் கருதச் செய்து, மலர்ச்சி அல்லது மாற்றத்தை அவர்கள் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது என்கின்ற நிலையினைச் செயற்கையாக வல்லாண்மையில் உருவாக்குவதாகும் இது.

சமூக உரிமைகள் எதுவும் இல்லாததை அவர்கள் ஒரு குறையாகவே எண்ணிப் பார்க்க இயலாதவாறு நடத்தப்பட்டனர். இத்தகைய இழிநிலை வாழ்வுக்காக மட்டுமே நாம் பிறந்திருக்கிறோம் என்ற உணர்வுகளை அவர்கள் பெறுமாறு பிறந்ததிலிருந்து நம்பச் செய்வதில் அடக்கும் அமைப்பினர் வெற்றி பெற்றிருந்தனர்.

அய்ரோப்பியத் தொழிற்புரட்சியினையடுத்து ஏற்பட்ட மாறுதல்கள் அன்றைய சமூக உற்பத்தியில் உழைக்கும் மக்களின் பங்களிப்பினைச் சிறப்பிக்கும், பெருமைப்படுத்தும் நிலையினை உருவாக்கித் தந்தன.

இந்தக் காலகட்டத்தில் உழைப்புக்கான ஊதிய உயர்வினைக் கூட்டாகப் போராடிப் பெற முடியும் என்னும் நம்பிக்கைகள் உருப்பெற்றன. இத்தகைய தொழிலாளர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்தி அவர்களுக்கான ஊதிய உயர்வைப் பெறுவதற்கும் மேலாக, அவர்களுக்கென ஓர் உலகம் காத்திருக்கிறது என்பதைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் காரல் மார்க்சும் பிரடெரிக் எங்கல்சும்

‘கம்யூனிஸ்ட் அறிக்கை’யில் வலியுறுத்தி நிலைநிறுத்தினர். “சுருங்கக் கூறினால், ஒவ்வொரு இடத்திலும் இன்றைய சமூக, அரசியல் நிலைமைகளின் அமைப்புக்கு எதிராக ஒவ்வொரு புரட்சி இயக்கத்தையும் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கின்றனர்..... இன்றைய சமூக நிலைமைகள் அனைத்தையும் வலிமையுடன் வீழ்த்தினால்தான் நமது நோக்கங்களை அடையமுடியும் என்று அவர்கள் வெளிப்படையாக முழக்கமிடுகின்றனர்.... பாட்டாளிகளுக்குத் தமது அடிமைத் தளைகளைத் தவிர இழப்பதற்கு வேறொன்றும் இல்லை. அவர்கள் வெல்வதற்கு ஓர் உலகம் இருக்கிறது” என்ற வழியினை உருவாக்கித் தந்தனர்.

ஊதிய உயர்வு, பொருளிய மேம்பாடு என்பவற்றோடு நில்லாமல், சமூக நிலைமைகள் அனைத்தையும் வலிமையுடன் வீழ்த்தவேண்டும் என்பதுதான் மார்க்சும் எங்கல்சும் காட்டிய வழியாகும்.

ஆனால், உலகெங்கும் உள்ள தொழிலாளர் இயக்கங்கள் பொருளிய மேம்பாட்டுக்காகப் போராடுவதில் முனைப்புடன் வெற்றி பெற்றனர் என்பதில் அய்யமில்லை. ஆனால், சமூக விடுதலைக்கான வழிமுறைகளை வகுத்துக்கொள்வது பெரிதும் இயலாமல் போய்விட்டது என்றுதான் கூறவேண்டும்.

இந்தியாவில், விடுதலைக்கு முன்னரும் பின்னரும் இந்த நிலைமைகள் தொடர்ந்துகொண்டிருந்தன; தொடர்ந்துகொண்டிருக்கின்றன. இந்தியாவின் சமூக. பொருளிய, பண்பாட்டுச் சூழல் சமூகநீதியினை முன்னிறுத்தும் களத்தினை முழுமையாக உருவாக்கித் தரவில்லை என்றும் கூறிவிட இயலாது. இதற்குத் தமிழ்நாடுதான் தன்னகரில்லாத எடுத்துக்காட்டாக விலகி நிற்கிறது.

தமிழ்நாட்டில் 1936இல் வீறுடன் எழுந்த அனைத்திந்திய விவசாயிகள் சங்கத்தின் பணிகளும் பங்களிப்பும் பல தடைகளை முறியடித்து முன்னேறிச் சென்றதைக் காண முடிகிறது.

சமீந்தாரி ஒழிப்பு, இனாம் முறை ஒழிப்பு, சாகுபடியாளர் காப்புச் சட்டம், நியாய வாரச் சட்டம், நில உச்சவரம்புச் சட்டம், பண்ணையாள் காப்புச் சட்டம், குடியிருப்பு மனை காப்புச் சட்டம், கடன் நிவாரணச் சட்டம் என்பன போன்ற பல சட்டங்கள் நிறைவேற்றப்படுதற்குக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான விவசாயிகள் சங்கம் பெரும்பங்காற்றியிருக்கிறது என்றுதான் கூறவேண்டும்.

ஆனாலும், இந்தச் சட்டங்கள் அனைத்தும் உழைக்கும் வேளாண் மக்களின் சமூக விடுதலைக்கு வித்திடவில்லை. பொருளாதார மாற்றங்களை உறுதிப்படுத்துகின்ற சட்டங்களாக இவை அமைந்தன என்பதை மறுப்பதற்கு இல்லைதான்.

சாணிப்பால், சவுக்கடி என்று குறிப்பாகச் சுட்டிக் காட்டப்பட்டாலும், தங்கம் செய்யாததைச் சங்கம் முடிக்கும் என்று சிறப்பிக்கப்பட்டாலும், பண்ணைகளின் ஒடுக்கும் முறைகளை அடக்கி ஓர் அமைப்பினைக் கட்டுவது எளிதல்ல.

உற்பத்தி கெடலாம், வள நிலங்களை வறட்சியாக்கக் கூடாது என்பன போன்ற பல்வேறு காரணிகளால் கூலி உயர்வு தருவது இயல்பாக நடக்கலாம். ஆனால், தமிழகத்தில், குறிப்பாகத் தஞ்சைத் தரணியைத் தங்கள் கட்டுக்குள் கொண்டிருந்த பெரும் நிலவுடைமையாளர்கள், கூலி உயர்வு கொடுப்பதுகூட அடுத்த கட்ட சமூக மாற்றத்துக்கு, சமூக விடியலுக்கு, சமூகப் புரட்சிக்கு இட்டுச் சென்றுவிடலாம் என அஞ்சினர். சிறு உயர்வு தருவதில்கூடத் தயக்கம் காட்டினர்.

ஆனால், ஊதிய உயர்வு என்ற பொருளியப் போராட்டத்துக்கு அடித்தள மக்களை அணியப்படுத்தவேண்டுமெனில், முதலில் சமூக மறுமலர்ச்சியை முன்னெடுக்கவேண்டும் என்று அப்போது விவசாய மக்களை ஒன்று திரட்டும் பொறுப்பினைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மேற்கொண்டிருந்த தோழர் சீனிவாசராவ் மிகப் பொருத்தமாக மதிப்பிட்டார். இந்த மதிப்பீடு அவருக்குப் பெரும் பயனைக் கொடுத்தது என்றுதான் கூறவேண்டும்.

சமூக விடுதலை என்ற அடித்தளத்தில் கட்டி எழுப்பப்பட்ட விவசாயிகள் சங்கம் பரவலான செல்வாக்கினைப் பெற்றது. 1968 வரை விவசாயிகள் சங்கத்தில் விவசாயத் தொழிலாளர்களும் இணைந்து ஒரே சங்கமாகச் செயல்பட்டனர்.

சிறு விவசாயிகள், குத்தகையாளர், உடல் உழைப்புத் தொழிலாளர் என வேளாண் தொழில் சார்ந்த பணிகளைச் செய்துகொண்டிருந்தோர், சங்கத்தின் செயல்பாடுகளை ஏற்றுக்கொண்டனர்.

நினைத்தால் பண்ணைப் பணிகளிலிருந்து நீக்குதல், வேறெங்கும் பணி கிடைக்காமல் செய்தல், இல்லத்தினருக்குத் தொல்லை தருதல், கட்டி வைத்து அடித்தல், சவுக்கடி, சாணிப்பால், காவலர்வழி அடக்க

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்



மே.து.ரா.

## மொழிவாரி மாகாணம் அமைக்க கம்யூனிஸ்ட் கட்சி இயக்கம் ஆரம்பிக்கும்

### நாட்டு நலன்களுக்கு மொழிவாரி மாகாணம் உகந்தது

அகமதாபாத், மே 25:

கூடிய சீக்கிரமே மொழிவாரி மாகாண அமைப்புக்காக கம்யூனிஸ்ட் கட்சி நாடெங்கிலும் பிரம்மாண்டமான இயக்கத்தைத் துவக்கும் என்று மக்கள் சபை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் ஏ.கே.கோபாலன் இன்று அறிவித்தார்.



அப்படிப்பட்ட ஒரு இயக்கத்தைத் துவக்குவதற்கு முன்னால் கம்யூனிஸ்ட் கட்சி பல கட்சிகளையும், குழுக்களையும் கலந்து ஒத்துழைப்பைப் பெற முயற்சிக்கும் என்றும் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

மொழி வாரி மாகாணங்களை அமைப்பது நமது மிக முக்கியமான பிரச்சனைகளில் ஒன்று என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது என்று அவர் கூறினார்

மேலும் பாராளுமன்றத்தில் உள்ள கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் எல்லாச் சட்டங்களையும் ரத்து செய்வதற்கு உறுதியாகப் போராடுவர் என்று தெரிவித்தார்.

**ஜனசக்தி, 27.05.1952**

## தமிழ் மக்களின் குரல்

# ஜன



டி.எம்.மூர்த்தி

**“கட்சியின் செய்தித்தாள் ஒரு பரப்புரையாளர், கிளர்ச்சியாளர் மட்டுமல்ல, அது அமைப்பாளரும் கூட” என்றார் லெனின்.**

வெற்றுப் “பொருளாதாரவாதம்” உள்ளிட்ட, தடம்புரட்டும் வாதங்களை எதிர்த்துப் போராடுவதற்கும், கருத்தியல் தூய்மையை உறுதி செய்வதற்கும் கட்சிச் செய்தித்தாளை லெனின் ஒரு கருவியாகக் கண்டார்.

தொழிலாளர்களுக்குக் கல்வி கற்பித்தல், வர்க்க எதிரிகளை அம்பலப்படுத்துதல் மற்றும் புரட்சிகர நடவடிக்கைக்கு ஆதரவைத் திரட்டுதல் ஆகியவை இதன் நோக்கமாக இருக்க வேண்டும் என்று வழிகாட்டினார்.

ஜனசக்தி தோன்றிய காலத்தில் இருந்து



அந்தப் பணியைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

ஜனசக்தி முதலில் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் ஏடாகவும், பின்னர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடாகவும் வெளிவந்திருக்கிறது. 1936ல் தொடங்கி, சில வருடங்கள் நாளேடாகவும், சில ஆண்டுகள் வார ஏடாகவும் இன்று வரை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

விடுதலைப் போராட்டக் காலத்தின் போதும், விடுதலைக்குப் பின்பும், சமூக அரசியல், பொருளாதார, அறிவியல், மொழி, பண்பாட்டுப் பிரச்சனைகளை, சாமானிய மக்களின் கண்கொண்டு பார்த்துப் பதிவு

# பொன்மலையில் ஜாலியன் வாலாபாக்

## சங்கத்திடல் ரத்தமயம்

[நமது விசேஷ நிருபர் ]

பொன்மலையில் ஜாலியன் வாலாபாக் படுகொலை! ஹாரிஸன் தர்பார் நடக்கிறது! தடியடிப் பிரயோகத்தில் படுகாயப்பட்டு 150 பேர் ஆஸ்பத்திரியில் கிடக்கின்றனர், துப்பாக்கிப் பிரயோகத்தால் படுகொலை செய்யப்பட்டனர் 4 தொழிலாளிகள். காயம்பட்ட 9 தொழிலாளர்கள் யமனுடன் போராடிக்கொண்டிருக்கின்றனர். பெண்களும் குழந்தைகளும் சித்திரவதை செய்யப்பட்டனர், யூனியன் அச்சுக்கூடம், காகிதம் எல்லா சாமான்களும் நாசமாக்கப்பட்டன.

### 400 பெண்கள் கைது.

சுமார் 1,200 தொழிலாளர்கள் கைது செய்யப்படுகின்றனர். 144 தலைவிரித்து தாண்டவமாடுகிறது.

‘தலைவர்கள், கிளைக் காரியதரிசிகள், அனைவரும் சிறைக்கூடத்தில் !

ஒரு லட்சம் ரயில்வே தொழிலாளிகளின் பிரதிநிதி, கம்யூனிஸ்டு எம்.எல் ஏ. நம்பியார் கைது செய்யப்பட்டு, நையப் புடைக்கப்பட்டு படுகாயத்துடன் ஆஸ்பத்திரியில் கிடக்கிறார்.

தமிழ்நாட்டு தொழிலாளர் தலைவர் ராமமூர்த்தி, விவசாயிகள் இயக்கத்தின் சிற்பி ஸ்ரீநிவாஸராவ் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

24ம் தேதி நடுநிசிப் பொழுதில் ரயில்வே ஸ்டிரைக் ஆரம்பித்தது. ஏகாதிபத்திய சட்டத்தின்படி, 14நாள் நோட்டீஸ் கொடுத்துவிட்டு ரயில்வே சிப்பந்திகள் போராட்டத்தை ஆரம்பித்தார்கள்.

பொய்ப் பிரசாரம் செய்து பார்த்தான் ரெய்னால்ட்ஸ், ஸ்டிரைக் செய்தால், வேலை போய்விடும், கைது செய்யப்படுவாய் என்றெல்லாம் மிரட்டினார்கள் ரெய்னால்ட்ஸின் கங்காணிகள். தொழிலாளர்களுடைய உறுதி குலையவில்லை.

நாசவேலைப் பூச்சாண்டி காட்டினான் ரெய்னால்ட்ஸ், கம்யூனிஸ்டு பூச்சாண்டி காட்டினார் பிரகாசம். ஆனால் பொதுஜன ஆதரவு மென்மேலும் தொழிலாளர்கள் பக்கம் உருண்டு திரண்டு வந்தது.

### 144 ஆட்சி

பொதுஜனங்களை தொழிலாளர்களிடமிருந்து பிரிக்க, மந்திரிகளின் அறிக்கைகளும், கைக்கூலி பத்திரிகைகளின் பொய்ப்பிரச்சாரமும் போதவில்லை. 144 போட்டது போலீஸ். சைதாப்பேட்டையில், தாம்பரத்தில், விழுப்புரத்தில், திருச்சியில், மதுரையில், மண்டபம் தனுஷ்கோடி, பாம்பன், விருதுநகர், தூத்துக்குடி, கள்ளிக்கோட்டை முதலிய இடங்களில் கூட்டங்களுக்கு தடை செய்தது.

23ம் தேதி முதல் பொன்மலையை முற்றுகையிட்டு, பெண்டு பிள்ளைகளையும் சிறுவர், சிறுமிகளையும் சித்திரவதை செய்து வந்ததைப்போல, லயன் முழுவதும் போலீஸ் பேயாட்டம் ஆரம்பித்தது.

### போலீஸ் சித்திரவதை

சேத்தியபட்டியில் ஒரு காங்கி மேஸ்திரி வீட்டுக்கு ஸப்கலெக்டரும் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டரும் போலீஸ் படையுடன் சென்று, மேஸ்திரியை அடித்தார்கள், பயமுறுத்தினார்கள். ஆனால், “சதையை துண்டு துண்டாக்கினும் என் ஜீவன் சாயாது, நான் பின்வாங்க மாட்டேன்” என்று பதிலளித்தான் அந்த வீரன்.

மணப்பாரை வட்டாரத்தில் ஸப் மாஜிஸ்ட்ரேட்டும், ஸப் கலெக்டரும் ஸ்டேஷனுக்கு ஸ்டேஷன் போய் சிப்பந்திகளை மிரட்டினார்கள். ராஜபாளையம் வட்டாரத்தில், போலீஸ் அதிகாரிகள் காங்கி தொழிலாளிகளை ஹிம்ஸித்தார்கள். ஆனால் இந்த ஜம்பமும் சாய்வில்லை.

தலைவர்களையும் ஊழியர்களையும் பிடித்துப் போட்டு விட்டால், தொழிலாளிகளை பணிய வைத்துவிடலாமென்று போலீஸும், ரெய்னால்ட்ஸும் திட்டமிட்டனர். தங்கள் சதியை மறைப்பதற்காக, ஸ்டிரைக்கர்கள் பலாத்காரத்தை கையாளுவதாகப் பொய்ச் சரடு விட்டனர்.

### கைது! கைது! கைது!

தாம்பரத்தில் இரு தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். விழுப்புரத்தில் 35 தொழிலாளிகள் கைது செய்யப்பட்டனர். கடலூரில் ஸ்டேஷன் மாஸ்டர் ராமசாமி அய்யர் கைது செய்யப்பட்டார். மாயவரத்தில் கிளைக்காரியதரிசி தோழர் காத்தமுத்துவும் இதர ஊழியர்களும் கைது செய்யப்பட்டனர். பட்டுக்கோட்டையில் காரியதரிசி உள்பட 4 பேர் சிறைப்பட்டனர். சேலத்தில் கிளைத் தலைவர், காரியதரிசி உள்பட 11 பேர் கைது. கேரளத்தில் கண்ணனூர், கள்ளிக்கோட்டை கிளைக் காரியதரிசிகளும் தலைவர்களும் கைது. கொல்லத்தில் பீடித் தொழிலாளர் தலைவர், ரெயில்வே தலைவர்கள் 5 பேர் கைது. நெல்லையில் தமிழ்நாடு கிஸான் சபை தலைவர் பாப்பங்குளம் சொக்கலிங்கம்பிள்ளையும் ஷண்முகம் பிள்ளையும் கைது; டவுன் ரயில்வே சங்கத் தலைவர்கள் கைது.

இராமனாதபுரத்தில், காரைக்குடியில் கிருஷ்ண அய்யர், ராஜகோபாலய்யர், டி. வி. சிவராமகிருஷ்ணன், ஏ. சிவராமகிருஷ்ணன் ஆகிய நான்கு ஸ்டேஷன் மாஸ்டர்கள் கைது. கோயில்பட்டியில் 15 பேர், நாட்டரசன்கோட்டையில் 3 ஸ்டேஷன் மாஸ்டர்கள் உள்பட 5 பேர், ஆல்வேயில் ஸ்டேஷன் மாஸ்டர் உள்பட 10 பேர்.........

### தடியடி தர்பார்

இந்த பயங்கர அடக்குமுறை திருச்சியில் சிகரத்தை எட்டியது. ஸ்ரீரங்கத்திலும் டவுனிலும் மறியல் செய்த தொண்டர்களை அடித்து கைது செய்தது போலீஸ். டவுனில் பேயாட்சி வந்தது! கூட்ஸ் ஆபிஸுக்கு வந்த வியாபாரிகளின் ஏஜெண்டுகள், தண்ணீர் எடுக்க பாலக்கரையண்டை லயனைத் தாண்டிய பெண்கள், வெற்றிலை பாக்கு கடையருகில் நின்ற மாணவர்கள் எல்லோர்மீதும் தடியாட்சி நடத்தினான் ஹாரிஸன்.

செப்டம்பர் மாதம் முதல் தேதி முதல் போலீஸ் பயங்கர ஆட்சி புது ரூபமெடுத்தது. அன்று 16 பெண்கள் மூன்று கோஷ்டிகளில் பொது ஜனங்களிடம் நிதி திரட்டச் சென்றனர்.

முதல் கோஷ்டியை மலபார் ஸ்பெஷல் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் டோமே என்பவன் நிறுத்தினான். அவர்களைக் கைது செய்தான். நீசத் தனமான பாஷையில் திட்டினான்.

அதுமாத்திரமல்ல, அம்பாளின் கையை தொட்டு இழுத்தானந்த மிருகம். ஆனால் வீரர்கள் குடும்பத்தில் பிறந்த அம்பாள் (அம்பாள் அவருடைய சகோதரன், சகோதரிகள், தாயார் அனைவரும், குடும்பம் முழுவதும் சிறைப்பட்டிருக்கிறது) தன் கையை விடுவித்துக்கொண்டாள். கூடிய கூட்டத்தையும் பெண்களின் தீரத்தையும் கண்ட சப் இன்ஸ்பெக்டர் தன் வாலைச் சுருட்டிக்கொண்டான். லாரியிலேற முடியாதென்று சொல்லிவிட்டு, பெண்கள் ஸ்டேஷனுக்கு நடந்தனர். சட்டத்தின் பெயரால், பெண்களை அவமதிக்குமிந்தக் கொடுமையை நிறுத்தும்படி பொதுமக்களை அறைகூவி அழைத்தனர், கோஷித்தனர் போலீஸ் ஸ்டேஷன் போகும்வரை.

தோழர் கமலா தலைமை வகித்து நடத்திய இன்னொரு கோஷ்டி (காங்கிரஸ் தலைவர் டாக்டர் ராஜன் பேரனின் மனைவி தோழர் கமலா) தெப்பகுளத்துக்கருகில் நிறுத்தப்பட்டது. பெண்களைத் தாறுமாறாகத் திட்டினான் கண்யமறியாத போலீஸ் அரக்கன், வெஞ்சினம் கொண்ட வனிதைகள் காலாலுதைத்தார்கள் அதிகாரியை! வாலறுபட்ட நரி மாதிரி முழித்தான் போலீஸ் அதிகாரி.

### ஹிட்லரிஸம்!

16 பெண்களும் மூன்று குழந்தைகளும் நாள் முழுவதும் லாக்கப்பில் அடைபட்டுக் கிடந்தனர். நள்ளிரவு வரை அவர்களைப் பட்டினி போட்டது போலீஸ், மறுநாள் தண்டிக்கப்படும் வரை பட்டினி கிடந்தார்கள் அவர்கள். பால் மணம் மாறாத பச்சிளங்குழந்தைகள் “பால்! பால் !” என்று பதறின. கன்னெஞ்சர்கள் சிரித்தார்கள், தண்ணீர் கொடு என்று தாராளமாய் உத்திரவிட்டான் ஒரு ஸப் இன்ஸ்பெக்டர். பெண்களுக்கு மலஜலம் கழிக்கக்கூட அனுமதி மறுத்தார்கள்.

ஹிட்லர் ஆட்சியில் நடந்த சித்திரவதையைப்பற்றி படித்திருக்கிறோம் திருச்சியில் இந்தப் பெண்மணிகள் அனுபவித்தார்கள்

விசாரணை நடந்ததே, அது ஒரு பெரிய கேலிக்கூத்து. கோவாவில் பாஸிஸ்டு போர்ச்சுகீஸ் நிர்வாகம் நமது சகோதர இந்தியர்களை தண்டித்ததே அதைவிட கேவலமானது. ராணுவக் கோர்ட்டைப் போலிருந்தது. பெண்களின் உறவினர்களை கோர்ட்டுக்குள்ளே விட மறுத்தார்கள், வக்கீல் ஹாலஸ்யம் (காங்கிரஸ் தலைவர், மாஜி எம். எல். ஏ.) கூட உள்ளே போகக்கூடாதென்றது போலீஸ், அவரையும் அடித்தது.

தங்கள் மீது சாட்டப்பட்டுள்ள குற்றமென்னவென்றுகூட தெரியவில்லையே என்றனர் பெண்கள். எதிர் வாதாட அனுமதி கோரினார்கள். “ போலீஸ் தரப்பில் சாட்சிகள் எங்கே?” என்று கேட்டனர்.

போலீசுக்கு சாட்சிகள் கிடையாது. தங்களுக்கு சாட்சி கொண்டு வர அவகாசம் வேண்டுமென்று கேட்ட பெண்களைப் பார்த்து, “இப்பொழுது கொண்டு வா சாட்சிகளை என்று (அ) நீதி.........

சப் மாஜிஸ்திரேட். “ உன் மனைவி தான் என் சாட்சி! கொண்டு வா !” என்று பதிலளித்தாள் ஒரு வீரப்பெண். ‘’ ஒரு வாரம் தண்டனை” என்று தீர்ப்பு கூறினார் போலீஸ்

# ாதுவுடைமைப் போர்வாள்

# சக்தி

செய்திருக்கிறது. ஏராளமான தகவல்களும் புகைப்படங்களும் கொட்டிக் கிடக்கின்றன.

விடுதலை பெற்று 78 ஆண்டுகள் நிறைவடையும் கடந்த இந்தியாவில், இன்று பேசப்படும் பிரச்சினைகளை அன்றே கம்யூனிஸ்டுகள் பேசியிருக்கிறார்கள். மொழி வழி மாநிலம் என்ற முழக்கத்தை எழுப்பியதோடு, மற்ற கட்சிகளையும் குழுக்களையும் கலந்து ஆலோசித்து ஒத்துழைப்பைக் கேட்டிருக்கிறார்கள். சதி வழக்குகளுக்கு ஆட்பட்டதோடு மட்டுமின்றி, அவற்றை ரத்து செய்யக்கோரி இயக்கங்களை நடத்தியதோடு, அதை நடத்துவதற்கான பணம் தேவைக்கு நிதிகேட்டு மக்களிடம் வசூலித்து இருக்கிறார்கள்.

ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தத்தின்போது வருவாய்த் துறையும் காவல்துறையும் இணைந்து நடத்திய காட்டாட்சியையும். அதனைத் தொழிலாளர்களும். அவர்கள் குடும்பத்தினரும், மக்களும் வீரத்தோடு எதிர்கொண்டதையும் ஜனசக்தியின் அரைப் பக்கக் கட்டுரை, கண்ணில் காண்பது போல் துல்லியமாகக் காட்சிப்படுத்துகிறது.

தி.க மாநாட்டில் ஜீவா ஆற்றிய உரையும், அதற்குத் தந்தை பெரியாரின் பதில் உரையும் உற்றுக் கவனிக்கத்தக்கவை. தமிழ்நாட்டு மக்கள் முற்போக்கு எண்ணம் கொண்டவர்களாக உருவாவதற்கான காரணங்களை அவர்களின் பேச்சு விளக்குகிறது.

ஜனசக்தி செய்திகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்கெனவே பல புத்தகங்கள் வந்திருக்கின்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு மேலும் பல புத்தகங்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

ஆனால், இன்றைய அரசியல் சூழலுக்கான அடி வேர்கள் புதைந்திருக்கும் இடங்களை, நமக்குத் தெரிந்த செய்திகளுக்கும் கூட. தெரியாத பல்வேறு பரிணாமங்கள் இருப்பதைக் கண்டறிய, களத்தில் பயன்படுத்த மீண்டும் மீண்டும் ஜனசக்தியின் பழைய இதழ்களைப் படித்தாக வேண்டும்.

அந்தப் பிரம்மாண்டமான தகவல் சுரங்கத் திலிருந்து, ஒரு சில துகள்களைத் தங்கள் பார்வைக்காகத் தந்திருக்கிறோம்.

**தொடர்புக்கு : 7397130367**

## - 1200 பேர் கைது!

மாஜிஸ்டிரேட்

ஆனால், பெண்கள் பணியவில்லை. சிறைக்கு செல்லும்போதும்,

"பட்டினிக் கொடுஞ் சிறைக்குள்
பதறுகின்ற மனிதர்காள்!
பாரில் கடையரே! எழுங்கள்!
வீறுகொண்டு தோழர்காள் !"

என்ற சர்வதேச கீதத்தை பாடி வீரமுழக்கம் செய்தார்கள். கேட்ட ஒவ்வொரு மனிதனும் அந்த தீரர்களுக்கு தலை வணங்கினான். ஒவ்வொரு தொழிலாளியும் முஷ்டி உயர்த்தினான்.

31 பெண்களும் 10 குழந்தைகளும் சிறைப்பட்டனர். கிருபாபுரி, ரத்தினம், ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகிய தோழர்களின் மனைவிகள், தோழர் மாணிக்கவாசகத்தின் குடும்பம் அனைவரும் சிறையில்!

2ந்தேதி, மாணவர் சங்க ஊழியர் தோழர் நாமகிரி தலைமையில் நிதி திரட்டச் சென்றது ஒரு கோஷ்டி. மலபார் போலீஸ் நாமகிரியை கையைப் பிடித்திழுத்து லாரியில் போட்டது !

1942ல் அஷ்டியிலும் சிமூரிலும் நமது சகோதரிகள் மானபங்கம் செய்யப்பட்டனர்; அதைக் கண்டித்து தேசம் கிளர்ந்தெழுந்தது. ஆனால், காங்கிரஸ் ஆட்சியில் அதே அக்கிரமக்காரர்கள் அரசு நடக்கிறது!

"ஜனசக்தி" புகைப்பட நிருபர் தோழர் கல்யாணம்கூட கைது செய்யப்பட்டார்! வீராங்கனைகளின் புகைப்படம் 'ஜனசக்தி'யில் வரக்கூடாதோ?

பொன்மலையில் ஒரு ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டு ஏற்பட்டிருக்கிறது. உடனுக்குடன் போலீஸ் கட்டளைகளை நிறைவேற்றுவது அதன் வேலை. 4ந்தேதி மாத்திரம், 200 தொழிலாளிகள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர் 1942ல் கூட இந்த ஸ்பெஷல் கோர்ட்டு நாடகம் நடக்கவில்லை!

இத்தனை அட்டூழியங்களும் தொழிலாளிகளை பணிய வைக்க முடியவில்லை. 4946ல் வேலைக்கு வராத பொன்மலைத் தொழிலாளிகள் டிஸ்மிஸ் செய்யப்படுவார்களென்று பயமுறுத்தினான் ரெய்னால்ட்ஸ். வேலை நிறுத்த வீரர்கள் அவன் முகத்தில் கரியைப் பூசினார்கள்.

சூறைக் காற்றுக் கெதிராக ஓட்டைக் கப்பலை ஓட்டும் குடிகார மாலுமியைப் போல வெறி பிடித்தாடியது போலீஸ் நிர்வாக அச்சு.

**ஜனசக்தி, நாள் 11.09.1946**

தோழர்கள் மீது கொலை, கொள்ளை, சதிக்குற்றங்கள் சாட்டப்பட்டுள்ளன

## நெல்லை சதிவழக்கை நடத்த உடனடியாகப் பணம் தேவை!

**பாதுகாப்புக் கமிட்டியின் வேண்டுகோள்!**

*சென்னை, ஏப்ரல் 12*

*திருநெல்வேலி ஜில்லா சதிவழக்கு 24.3.1952ம் தேதியிலிருந்து நெல்லை அடிஷனல் ஜில்லா நீதிபதி முன் விசாரணை நடந்து வருகிறது. இந்த வழக்கு கீழ் கோர்ட்டில் ஏழரை மாதங்கள் நடந்து 10.12.1951ல் கமிட் செய்யப்பட்டது. செஷன்ஸ் கோர்ட்டில் வழக்கு முடிய மூன்று மாதங்களாகும்.*

*இந்த வழக்கின் ஆரம்ப விசாரணையின்போது ரூபாய் 3000 செலவாகியுள்ளது. சர்க்கார் தரப்பில் 196 சாட்சிகள் விசாரிக்கப்பட்டிருக்கின்றனர். சுமார் 319 தஸ்தாவேஜுகள் சர்க்காரால் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் பிரதானமானவற்றைக்கூடப் பணமின்மையால் 'நகல்' எடுக்க முடியவில்லை.*

*இந்த வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கும் பெரும்பான்மையான தோழர்கள், சாதாரண விவசாயிகளும், தொழிலாளிகளும், தொழிற்சங்க விவசாயச் சங்க ஊழியர்களுமாவார்கள். இந்த வழக்கிற்காக அவர்கள் குடும்பங்கள் அவர்கள் சக்திக்கு அதிகமாகவே கையிலுள்ள அனைத்தையும் கொடுத்து உதவியுள்ளனர். வழக்கிலுள்ள தோழர்கள் வீடுகளிலிருந்து ரூ. 1800 வரை கொடுத்திருக்கிறார்கள். வெளியிடங்களிலிருந்து ரூ.1200 வசூலிக்கப்பட்டது. கீழ்க்கோர்ட்டில் வழக்கு 7 மாதங்களுக்குமேல் நடந்தது. ஜாமீனுக்காகவும் சட்டப் பிரச்னைகள் சம்பந்தமாகவும் ஹைக்கோர்ட்டிற்கு 6 தடவைகள் போகவேண்டியது ஏற்பட்டது. கீழ்க் கோர்ட்டில் ஆரம்ப வழக்கே இல்லையென்று விடுதலை செய்யப்பட்டனர் 10 தோழர்கள். இவர்கள் விடுதலையை எதிர்த்து போலீஸ், ஜில்லா மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் அப்பீல் செய்தது. இதை எதிர்த்து 2 மாதங்கள் வரை வழக்காட வேண்டியிருந்தது. மிகச் சிக்கனமான செலவு; செலவழிந்து விட்டது. இப்போது கையில் பணம் கிடையாது.*

*இந்த வழக்கிலுள்ள பலர் மீது கொலை, கொள்ளை நாசவேலை போன்ற மிகக் கடுமையான குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. 15 வருடங்களாக மக்கள் சேவையில் ஈடுபட்டுள்ள தோழர்களைச் சிறைக்குள்ளேயே முடக்கிப்போடவும், தூக்குமேடையேற்றவும் சர்க்கார் நினைக்கிறது.*

*சர்க்காரின் இந்தச் சதித்திட்டத்தை முறியடித்து, தலைசிறந்த மக்களின் ஊழியர்களை வெளியே கொண்டுவர இந்த வழக்கைத் திறமையாக நடத்தவேண்டும்.*

*ஆகவே திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பொதுஜன ஸ்தாபனங்கள் ஜனநாயக உள்ளங் கொண்ட தனிப்பட்டவர்கள், எங்கள் மீது அனுதாபம் கொண்டவர்கள் யாவரும் இந்த வழக்கின் நிதிக்கு உங்கள் சக்திக்கு முடிந்த அளவு அதிகபட்சம் மீதி கொடுத்து உதவ வேண்டுமென வேண்டிக்கொள்கிறேன்.*

*நெல்லை ஜில்லா சதிவழக்கு பாதுகாப்பு கமிட்டி*
*நிதி அனுப்பவேண்டிய முகவரி:*
*திரு.என்.சண்முகம் எம்.ஏ, பி.எல் அட்வகேட்*
*தெற்கு பஜார், பாளையங்கோட்டை.*

**ஜனசக்தி, 17.4.1952**

## சேலம் தி.க, மாநாட்டில் ஜீவா

**"ஐக்கிய ஜனநாயக முன்னணியின் சிறந்த பகுதியாக விளங்குங்கள்" ஜீவா.**

**"சேர்ந்து போராட வேண்டியதில் சேர்ந்து போராடுவோம்" பெரியார்.**

**(நமது விசேஷ நிருபர்)**

'சேலம், ஜூன் 15நேற்று பிற்பகல் 3 மணிக்கு மாகாண தி.க பொது மாநாடு ஆரம்பித்தது. தோழர் ஜீவா தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மகாநாட்டில் கலந்துகொண்டார். திறப்பாளர் சொற்பெருக்குக்குப் பின்னால், "பேசு கிறீர்களா!" என்று பெரியார், ஜீவாவிடம் கேட்டபொழுது, கட்சியின் சார்பில் வாழ்த்துத் தெரிவிக்க வந்திருக்கிறதாகவும், தனியாகப் பேசச் சொன்னால் ஆட்சேபணை இல்லையென்றும் கூறினார். சில நிமிஷங்களில், தலைவரை பிரரேபிக்கும்படியாகவே வரவேற்புக் கழகத் தலைவரால் ஜீவா அழைக்கப்பட்டார், ஜீவா பேசியதன் சுருக்கம் பின்வருமாறு :

சகோதரர்களே! சகோதரிகளே!

நான், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதியாக இந்த மகாநாட்டில் கலந்துகொள்ள வந்திருக்கிறேன். மிக முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்தர்ப்பத்தில், தி.க.வின் இந்த மாநில மாநாட்டிற்குக் கம்யூனிஸ்ட் கட்சியின் சகோதர அன்போடு கூடிய வாழ்த்துகளைத் தெரிவிக்க அனுப்பப்பட்டிருக்கிறேன் என்று தொடங்கி சுமார் முக்கால் மணி நேரத்துக்கு மேலாகவே பேசினார் ஜீவா.

"..ஆனால் ஆச்சாரியார் நாஸ்திகத்தை ஒழித்து ஆஸ்திகத்தை நிலைநாட்டவே முதல் அமைச்சர் பதவி ஏற்றிருக்கிறேன் என்று தொடர்ச்சியாகக் கூறிவருகிறார். மதச்சார்பற்ற குடியரசில், ஒரு பெரிய ராஜ்ஜியத்தின் முதலமைச்சர் அதிகார பலத்தை ஆஸ்திகப் பிரச்சாரத்திற்கு உபயோகிப்பது குடியரசின் அடிப்படைக் கொள்கைக்கே விரோதமான சட்டவிரோதம்" என்பதை விளக்கினார்.

கம்யூனிஸ்ட் கட்சியையும், தி.க.வையும் ஒழித்துக் கட்டவே அதிகாரத்திலிருக்கிறேன் என்று பொருள்பட, ஆச்சாரியார் பேசிவருவதன் அந்தரங்கத்தை மகாநாட்டார் கவனிக்கும்படி வேண்டிக் கொண்டார்.

தேர்தல் முற்காலத்தில் தி.க., க.க. (இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி) கூட்டணிப் பிரச்னைகளின் பேரில் ஏற்பட்டு வந்ததால், காங்கிரஸ் எதிர்ப்பு ஜனநாயகச் சக்தி வளர்ந்து வந்ததையும், தேர்தல் காலத்தில் கூட்டணி ஏற்பட்டதால் காங்கிரஸ் எதிர்ப்புக்கு மகத்தான வெற்றி ஏற்பட்டதையும், தேர்தல் பிற்காலத்தில், இந்தக் கூட்டணியால், ஜனநாயகச் சக்திகளின் வளர்ச்சியும், காங்கிரஸ் எதிர்ப்பு உணர்ச்சியும் நாட்டில் மிக உயர்ந்த கட்டத்திற்குச் சென்றதென்றும், காங்கிரஸை விட எண்ணிக்கையிலும் தரத்திலும் சிறந்த ஐ.ஜ.மு கட்ட முடிந்ததென்றும், அதனால் மானங்கெட்டதனமாக, ஜனநாயக விரோதமான, ராஜாஜி நியமனம், பதவி ஏற்பு, ஆள்பிடிப்பு. 144 பிரயோகம் முதலியவை நடந்ததென்றும், ஆயினும் ஐ.ஜ.முவின் உறுதியை உடைக்கவும் முடியவில்லை, காங்கிரஸ் பலத்தை நிலைப்படுத்திக் கொள்ளவும் முடியவில்லை என்றும், இதற்குக் காரணம், ஜனநாயக இயக்கத்தின் வளர்ச்சியும் ஐ.ஜ.முவின் வளர்ச்சியும், அதற்கு அடிப்படையான மக்கள் இயக்கமும் என்றும், தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் க.கட்சியும் தி.க.வும் நடத்தும் இயக்கமும் என்றும் விரிவாக விளக்கினார். ஆகவே க.கட்சியைத் தனது முதல் எதிரி என்று ராஜாஜி கூறினார். க.க., தி.க.வை ஒழிக்க நாஸ்தீக ஒழிப்புப் பிரசாரம் ஆரம்பித்திருக்கிறார் என்றும் விளக்கினார். நாம் மக்கள் பிரச்னைகளை முன்னிறுத்தி காங்கிரஸ் ஆட்சியை அம்பலப்படுத்துகிறோம். நமக்கு பதில் சொல்ல முடியவில்லை. பிரச்னைகளை பைசல் பண்ணவும் முடியவில்லை.

ஆத்திரப்படும் மக்களை ஏமாற்றவும், க.கட்சியையும், தி.க.வையும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தவுமான சூழ்ச்சியாக ராஜாஜி பிரார்த்தனையிலும், பஜகோவிந்தத்திலும், நாஸ்தீக ஒழிப்பிலும், அடைக்கலம் புகுகிறார். இன்றைய மக்கள் புதிய மக்கள் என்பதைக் காண மறுக்கிறார் என்றும் விளக்குகிறார்.

ஏற்கனவே, தி.க., க.க. கூட்டணியின் வெற்றியையும், நமது பிளவால் காங்கிரஸ்க்குக் கிடைத்த வெற்றியையும், பற்றிய படிப்பினையைக் கவனத்தில் கொண்டு, ராஜாஜி ஆட்சியால் ஏற்பட்டுள்ள அபாயத்தையும் நினைவில் வைத்து, ஐ.மு.இன்னும் வலுப்பட, ஐ.ஜ.மு.வின் கூட்டு சர்க்கார் மலர, தி.க.அரசியல் ரீதியாக, ஐ.ஜ.மு.வில் சிறந்த அங்கமாகத் திகழவேண்டுமென்றும், மக்கள் பிரச்னைகளிலெல்லாம், தி.க., க.க. கூட்டணி ஏற்பட வேண்டுமென்றும், ஏற்பட முடியுமென்றும் உருக்கமாகவும் விளக்கமாகவும் வேண்டிக் கொண்டார் ஜீவா.

ஜீவாவின் பேச்சை, அடிக்கடி கிளப்பிய கரகோஷத்தோடு, மாநாட்டார் உற்சாகமாக வரவேற்றனர்.

பின்னர் தலைவர் பெரியார் தமது முன்னுரைப் பேச்சில் ஜீவா குறிப்பிட்ட அபாயத்தைச் சுட்டிக்காட்டி, அந்த அபாயத்தை ஒழிக்கப் போராடியாக வேண்டும் என்றார். நாஸ்திக ஒழிப்பு என்ற சாக்கில் நம்மை ஒழிக்க முயல்வதை நாம் பார்த்துக்கொள்வோம் என்றும், கம்யூனிஸ்ட் எதிர்ப்பை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்றும் கூறி, இரண்டு பேரும் சேர்ந்து போராட வேண்டியதில் சேர்ந்து போராடுவோம் என்று கூறியபொழுது பெருத்த கைதட்டல் மகாநாட்டில் ஏற்பட்டது.

கம்யூனிஸ்ட்டுகள் நடத்தும் போராட்டத்தில் நாஸ்திகமும் இருக்கிறது. நாம் நடத்தும் போராட்டத்தில் கம்யூனிஸமும் இருக்கிறது என்றும் எடுத்துச் சொன்னார்.

**ஜனசக்தி, 16.06.1952**

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

# ஜனசக்தியின் 15 ஆண்டு வீரசரிதம்

## இளம் தோழர்களின் அரிய சாதனை மக்களின் பேராயுதமாக விளங்கும்

ஜனசக்தி ஏனைய தினத்தாள்களைப் போன்று செய்திகளைத் தாங்கிக்கொண்டு இன்று முதற்கொண்டு வெளிவருகிறது. ஜனநாயக இயக்கத்தில் ஆர்வம் கொண்ட தமிழ் மக்கள் அனைவருக்கும் இது பூரிப்பை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை.

ஜனசக்தியை பதினைந்து வருடங்களுக்கு முந்தித் துவங்கிய தோழர்களுக்கு இந்த இதழ்களைக் கண்டவுடன் எவ்வளவு மகிழ்ச்சி 15 வருஷ காலத்திய சரித்திரம் கண்முன்னே ஒரு ஒரு சினிமா படத்தைப் போன்று வந்து ஓடுகிறது. ஆம் 15 வருஷத்திய சரித்திரம்தான். ஏனெனில் ஜனசக்தியின் பிறப்பும், வளர்ப்பும், வாழ்வும் தமிழ்நாட்டு ஜனநாயக இயக்கத்தின் சரித்திரத்தின் பகுதியல்லவா? அதோடு இதனைப் பிரிக்க முடியாது பொருந்திக் கிடக்கும் சரித்திரமல்லவா?

### உதயம்

15 வருஷங்களுக்கு முன்னே 1937இலே ஜனசக்தியை வார இதழாக ஆரம்பித்த போது, இயக்கம் இருந்த நிலை என்ன? கைவிரலில் எண்ணிவிடக் கூடிய சில தோழர்கள். கையில் காசும் கிடையாது மக்களிடையே மிகுந்த செல்வாக்கும் கிடையாது. அப்பொழுதுதான் தொழிலாள வர்க்க இயக்கத்தைக் கட்ட ஆரம்பித்திருந்த சமயம் அது.

ஆயினும் இயக்கத்தை வளர்ப்பதற்குப் பத்திரிகை சிறந்த ஆயுதம் என்பதைக் கண்டனர்; எப்படியும் பத்திரிகையை நடத்துவது எனத் தேர்ந்திட்டனர்.

அன்று தேர்தல்கள் முடிந்து ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் தலைமையில் சென்னையில் முதன்முதலாக காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டிருந்தது.

பத்திரிகையை நடத்துவதற்குச் சட்டத் தடைகள் ஏதும் விதிக்கப்பட மாட்டாது என்ற நினைப்பு இருந்து வந்தது தோழர்களுக்கு.

அன்று பத்திரிகைக் காகிதத்தின் விலை பவுண்டுக்கு முக்கால் அணாவுக்கும் குறைவு. (இன்று பவுண்டு எட்டணாவுக்குக் கிடைப்பதும் கஷ்டமாக உள்ளது) ஆகவே, இரண்டுமூன்றுஇதழ்களுக்குக்காகிதத்தை வாங்கி, அச்சுக் கூலிக்கு மட்டும் கையில் பணத்தை வைத்துக்கொண்டு கொண்டு செட்டித் தெருவில் ஒரு சிறிய அறையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு பத்திரிகையை ஆரம்பித்தோம்; பி.என் பிரெஸ் என்று சிந்தாதிரிப்பேட்டையில் ஒரு அச்சகச் சொந்தக்காரர் பத்திரிகையை அச்சிடச் சம்மதித்தார்.

### அடக்குமுறை பாணம்

காங்கிரஸ் மந்திரி சபைதான் இருந்தது. ஆயினும் பத்திரிகையை ஆரம்பிப்பதற்கு அனுமதி கேட்டவுடன் மாகாண மாஜிஸ்திரேட், ரூ.500 ஜாமீன் கேட்டார்.

எப்படியோ அதைச் சமாளித்து பல நண்பர்களிடையே கடன் வாங்கி ஜாமீனையும் கொடுத்து பத்திரிகையை வெளிக்கொண்டு வந்தோம்.

பத்திரிகை சட்டவிரோதமானதல்ல; அதில் வெளிவந்த கட்டுரைகள் அன்றி அன்றிருந்த ஏகாதிபத்தியம் விதித்த சட்டங்களையாவது மீறியிருந்தால், நடவடிக்கை எடுப்பதற்குச் சட்டத்தின் மூலமாக வழி இருந்தது. ஏகாதிபத்திய அடக்குமுறைச் சட்டங்கள் அனைத்தையும் உபயோகிப்பதற்கு ஸ்ரீ ராஜகோபாலச்சாரியார் சற்றும் தயங்கியது கிடையாது. 124 ஏ செக்சன் (ராஜத் துவேஷம்) கிரிமினல் சட்டத் திருத்தச் சட்டம், 144 முதலிய சகல அடக்குமுறைச் சட்டங்களையும் 1937 –39 வருஷங்களில் ஸ்ரீ ராஜ கோபாலாச்சாரியார் உபயோகித்து தேசிய இயக்கத்துக்கே இழுக்கை உண்டாக்கியது சரித்திரமறிந்த விஷயம்.

இந்த அடக்குமுறைச் சட்டங்களில் கவசம் போதவில்லை ராஜாஜியின் மந்திரி சபைக்கு, சட்ட வரம்புக்குட்பட்டே புதிய எண்ணங்களை, உண்மையான ஜனநாயக ஷரத்துகளை மார்க்சியத் தத்துவங்களை, மக்களிடம் பிரச்சாரம் செய்யும் ஜனசக்தி என்பதைக் கண்டது அந்த சர்க்கார்.



ஜனசக்தியின் 15 ஆண்டு வீரசரிதம்

இளந்தோழர்களின் அரிய சாதனை

மக்களின் பேராயுதமாக விளங்கும்

உதயம்



எப்படியாவது, இதைத் தடுக்க வேண்டும் என்று உறுதி கொண்டது. எனவே சட்டம் எப்படி இருந்தால் என்ன? அதிகாரம் கையில் இருக்கிறது. அதைக் கொண்டு எதையும் சாதிக்கலாம் என்று நினைத்தது.

### பயமுறுத்தல் படலம்

போலீஸ்காரர்கள் ஜனசக்தி அச்சிடப்பட்டு வந்த பி.என் பிரஸ் சொந்தக்காரர்களிடம் விரைந்தது. அவரை பயமுறுத்தினர். சர்க்கார் மனசு வைத்தால் எவ்வளவோ வழிகளிலே , அவருடைய தொழிலையே நாசம் செய்து விட முடியும் என்பதைக் கண்டார் அச்சொந்தக்காரர்.

மூன்றாவது இதழுக்குப் பிறகு, பத்திரிகையை அச்சடிக்க மறுத்து விட்டார். ராஜாஜி மந்திரி சபையின் சர்வாதிகார கடாட்சத்தால் ஜனசக்தி நின்றுவிட்டது.

அடாவடித்தனமான இத்தாக்குதலுக்கு அடிபணிந்து விடுவதா என்று தோழர்கள் தீர்மானித்தனர்.

### சொந்த அச்சகம்

நாமே அச்சகத்தைத் தீர்மானிப்பது எவ்வளவு இன்னல்கள் வந்த போதிலும் சமாளிப்பது என்று உறுதி கொண்டனர். தமிழ் மக்கள் அதற்கு வேண்டிய ஆற்றலையும், ஆதரவையும் அளிப்பார்கள் என்று மக்கள் மீது அசையாத நம்பிக்கை இருந்தது அவர்களுக்கு.

சில மாதங்களுக்குள்ளே, நிதியைத் திரட்டி, திருவல்லிக்கேணியில் ஒரு அச்சகத்தை நிறுவினார்கள். ஜாமீன் கேட்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, இயக்கத்தில் சம்பந்தப்படாமலிருந்த ஒரு நண்பரின் பேரால், ஜேஸு பிரஸ்' என்ற பேரால் அந்த அச்சகம் துவக்கப்பட்டது. ஒரு சிறிய ஜப்பான் மெஷின் ஒரு டிரெடில், அச்செழுத்துகள் இவைதான் அன்றிருந்த பிரஸ்.

இருந்த தோழர்களோ மிகச் சிலர். அவர்களே கிளர்ச்சிக்காரர்கள், பிரச்சாரகர்கள், தொழிற்சங்கத்தைக் கட்டுபவர்கள்; வேலை நிறுத்தங்களில் ஈடுபடுபவர்களும் அவர்களே, பத்திரிகையை நடத்துபவர்களும் அவர்களே ! இயக்கத்திலிருந்த அசையாத நம்பிக்கை மக்கள் மீது இருந்த அசையாத நம்பிக்கைதான் அவர்களுக்கிருந்த அழியாத வளரும் பொக்கிஷமாக இருந்தது.

### மக்களின் ஆயுதம்

தமிழ்நாட்டிலே அன்று சோசியலிசத்தைப் பொதுவாகப் பல பகுதிகளுக்குப் பிரச்சாரம் செய்த பெருமை ஜனசக்தியைச் சார்ந்தது. புதிதாக வளர்ந்து வரும் தொழிற்சங்க இயக்கத்தைப் பிரதிபலித்தது. அவர்களுடைய போராட்டங்களுக்கு ஆதரவு அளித்தது. ஏனைய மக்களின் ஆதரவைத் திரட்டும் ஒரு கருவியாக விளங்கியது.

வளர்ந்து வந்துகொண்டிருந்த பாசிசத்தை எதிர்த்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, அதன் யுத்தத்தை ஏவிவிடும் பாசிசத்திற்கு அனுசரணையான போக்குக்கு எதிராக மக்களைத் திரட்டும் ஆயுதமாக இருந்தது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளையும் காங்கிரஸ் தலைமையின் சமரசப் போக்கையும் அம்பலப்படுத்தியது. ஜனசக்தி திருவிதாங்கூர் மைசூர், தென்கெனால், ராஜ்கோட் முதலிய சமஸ்தான மக்களின் போராட்டங்களுக்குத் தமிழ் மக்களின் ஆதரவைத் திரட்டியது ஜனசக்தி. காங்கிரஸ் தலைமைப் போராட்டங்களைக் காட்டிக் கொடுக்கும் போக்கில் சென்று கொண்டிருந்ததை அம்பலப்படுத்தியது ஜனசக்தி.

### ஏகாதிபத்திய தாக்குதல்

1939இல் செப்டம்பரிலே இரண்டாவது யுத்தம் மூண்டது. ஏகாதிபத்தியம் நம்மீது பாய்ந்தது. ஆரம்பத்தில் பலியானவர், ஜனசக்தி பத்திரிகையும், ஜேஸு பிரஸையும் நிர்வகித்துவந்த தோழர் பி.ஸ்ரீனிவாசராவ் தொடர்ச்சியாக, தோழர்கள் இளங்கோ, முருகேசன், ஜீவா ஆகியோர் அடக்குமுறைக்குப் பலியானார்கள். எஞ்சியிருந்த சில தோழர்கள் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டிவந்தது. பத்திரிகையை நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை. காகிதம் சப்ளை செய்து வந்த வியாபாரிக்குக் கடன் பாக்கி நின்றது. நமக்கு வர வேண்டிய நிலுவைப் பணத்தையோ வசூல் செய்வதற்கு வழியும் இல்லை. பல தோழர்கள் சிறைப்பட்டு விட்டதனால்.

அச்சகத்து மெஷினை திண்டுக்கல் நண்பர் ஒருவரிடம் ஒப்படைத்து, ஜனசக்தி கடனைக் கொடுக்கும்படி கூறிவிட்டோம்.

அடக்குமுறையின் நடுவிலும் எப்படியும் பத்திரிகையைக் கொண்டு வருவது என்று தலைமறைவாக இருந்த தோழர்கள் உறுதி கொண்டனர். 1940லே, சைக்ளோ ஸ்டைல் செய்யப்பட்டு ஜனசக்தி சில இதழ்கள் வெளிவந்தன. ரகசியமாக அது விநியோகிக்கப்பட்டது. ஆனால் அந்த தோழர்களும், 1940 டிசம்பரில் கைது செய்யப்பட்டு, சென்னை சதி வழக்கில் சேர்க்கப்பட்டவுடன் அதுவும் நின்றுவிட்டது.

### மீண்டும் பிறந்தது

1942 ஜூன் மாதத்தில் தோழர்கள் விடுதலை அடைந்தவுடன், மீண்டும் ஜனசக்தியைத்துவக்குவதை முதல்வழியாக மேற்கொண்டனர். தமிழ் மக்களிடையே வசூலுக்குச் சென்றனர். 1 மாதத்திற்குள் கிடைத்த ஓராயிரத்து அறுநூறு ரூபாயைக் கொண்டு பத்திரிகையை ஆரம்பித்தனர். காகிதக் கட்டுப்பாடு முதலிய புதுப்புதுச் சட்டங்கள் வந்தன. காகித கோட்டா நமக்குக் கிடைக்கவில்லை, கள்ளமார்க்கெட்டில் காகிதத்தை வாங்கி பத்திரிகை நடத்தி வந்தோம்.

பாசிசத்தை எதிர்த்து தமிழ் மக்களைத் திரட்டியது ஜனசக்தி. ஏகாதிபத்தியம் தேசிய இயக்கத்தினர் மீது ஏவி விடப்பட்ட அடக்குமுறையை எதிர்த்து, தேசிய சர்க்காருக்காக மக்களைத் திரட்டியது. தொழிலாளி, விவசாயி மக்களின் போராட்டங்களை ஆதரித்து, வளர்க்கும் பேராயுதமாக விளங்கிற்று. கள்ள மார்க்கெட்காரர்களை அம்பலப்படுத்தியது. இதற்குக் கள்ள மார்க்கெட்டில் காகிதத்தை வாங்க வேண்டியிருந்ததை நினைத்தால், இன்று சிரிப்பு வாயைப் பொத்துக் கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டுத் தொழிலாளி விவசாயி மக்களின் ஆதரவால் ஜனசக்தி வளர்ந்தது. அவர்களின் நல்வாழ்வுக்கான இயக்கங்களின் பத்திரிகையாக அது விளங்கியது தானே, இதற்குக் காரணம்.

சர்க்காரிடமிருந்து வந்த பயமுறுத்தல்கள் ஒன்றிரண்டு அல்ல, கடைசியில் அச்சக சட்டகத்தின் கீழ் பி.ராமமூர்த்திமீதும், எஸ்.ராமகிருஷ்ணன் மீதும், வழக்கு தொடரப்பட்டுதண்டனையும்விதிக்கப்பட்டது. அச்சகத்துக்கும் பிரசுதாரருக்கும் ரூ.1000 ஜாமீன் கேட்கப்பட்டது. யுத்தத்திற்குப் பிறகு, நாட்டில் வளர்ந்தோங்கிய புரட்சி அலை மோதலைப் பிரதிபலித்து நின்றது ஜனசக்தி.

### காங்கிரஸ் அடக்குமுறை

காங்கிரஸ் மந்திரி சபை 1946 இல் ஏற்பட்ட பிறகு அடக்குமுறை நின்றதா? காங்கிரஸ் தலைமைதான் நாட்டு மக்களின் விரோதியாக, ஏகாதிபத்திய நலன்களுக்கும் நிலப் பிரபுக்களின் நலன்களுக்கும் அப்பழுக்கில்லாமல் தொண்டாற்றி வந்திருக்கிறதே இந்தக் காலத்தில் !

1947 இல் ஜனவரியில் மிகப்பெரிய தாக்குதலை நடத்தியது காங்கிரஸ் சர்க்கார். நூற்றாண்டுக்கான தோழர்கள் விசாரணையின்றிச் சிறைக்கு அனுப்பப்பட்டனர். ஆயினும் ஜனசக்தி வெளிவந்து கொண்டுதான் இருந்தது. அதை அன்று நடத்திய பெருமை இளம் தோழர்களைச் சேர்ந்தது. தமிழ்நாட்டு மக்களின் ஜனநாயகச் சக்தி, இந்த அடக்கு முறையைப் பின்னடையச் செய்தது. 1947 ஆகஸ்ட் தோழர்கள் விடுதலையடைந்தனர்.

### தினசரியாக்க முடிவு

ஜனசக்தியை தினசரி பத்திரிக்கையாக நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஒரு லட்சம் ரூபாய் நிதி கோரினார்கள். 8 மாதத்திற்குள் தமிழ் மக்கள் ஒரு லட்சத்துக்கு மேல் அள்ளித் தந்தனர். ஒரு ரோட்டரி மெஷினை லட்சத்து ஐயாயிரம் ரூபாய்க்கு வாங்கினோம். ஆனால் 1948 பிப்ரவரியிலேயே பத்திரிக்கையை துவக்குவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாவதற்குள்ளேயே மீண்டும் தாக்கியது காங்கிரஸ் சர்க்கார்

### ஜனசக்திக்குத் தடை

இந்தத் தடவை தோழர்களை சிறையில் அடைத்ததோடு அது நிற்கவில்லை. வாரப் பத்திரிகையை தடை செய்தது. அச்சகத்தை தடை செய்தது. அதற்கு அப்பால் தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் தாண்டவமாடிய கோர அடக்கு முறையை விவரிக்க வேண்டிய அவசியமே இல்லை. இந்தத் தாக்குதலை சமாளிப்பதற்கு புதிதாக வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன.

### அடக்குமுறை தகர்ந்தது

ஆனால் இந்த அடக்கு முறையைக் கொண்டு மக்களை நசுக்கி விட முடியாது என்பதை சரித்திரம் நிரூபித்தது. பொது தேர்தல்கள் அணுகிக் கொண்டிருந்தது. தோழர்களை சிறையில் அடைத்துவிட்டு, தேர்தலை நடத்தி நாடகம் நடத்த காங்கிரஸ் சர்க்கார் உறுதி கொண்டது.

தமிழ்நாட்டு மக்களும் ஜனநாயக கட்சிகளும் செய்த கிளர்ச்சி சர்க்காரை பின்வாங்க வைத்தது.

தேர்தல்கள் நெருக்கத்தில் தேர்தல் இயக்கத்திற்கான ஆதார கருவியாக

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

# என்றுமே கண்டிராத எழுச்சி சென்னையில் ஹர்த்தால்

ஜனசக்தி
தின இதழ்
ஆசிரியர்: ப.ஜீவானந்தம்.

சென்ற 23 தேதி சென்னையில் மகத்தான பொது வேலை நிறுத்தம், கடை அடைப்பு, ஊர்வலம், பொதுக்கூட்டம் இதுவரை என்றுமே இத்தகைய நிகழ்ச்சியை சென்னை நகரம் கண்டதில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மகத்தான மாபெரும் ஜீவ சக்தியாக அன்று ஜனசக்தி திரண்டு எழுந்தது.

எழுந்ததோடு நிற்கவில்லை, கட்டுப்பாட்டோடு இயங்கியது. ஆத்திரமூட்டலுக்கு இரையாகவில்லை. இறுதிவரை உறுதியுடன் நின்றது.

பம்பாயில் கடற் படையினரை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய படைகள் அழிக்க முயற்சித்தனர். இந்திய துருப்புகள் அவர்களை சுட மறுத்துவிட்டன. ஆகாய விமானங்கள் மூலம் பிரிட்டிஷ் துருப்புக்கள் கொண்டுவரப்பட்டனர். ராட்சசன் பீரங்கிகளால் கடற் படையினர் சுடப்பட்டனர்.

“அவர்களை சுடாதே” என்று ஆர்த்தெழுந்தது பம்பாய் தொழிலாளர் வர்க்கம். 60 மில்களில் இருந்து 3 லட்சம் பேர் வெளிவந்தனர். பிரிட்டிஷ் ராணுவம் அந்த மக்களையும் சுட்டு வீழ்த்தி, ரத்த வெள்ளத்தைப் பெருக்க தொடங்கிற்று.

அதை கண்டிக்க எழுந்தது சென்னை தொழிலாளர் வர்க்கம். கம்யூனிஸ்ட் கட்சி, மாகாண தொழிற்சங்க காங்கிரஸ், ட்ராம்வே தொழிலாளர் சங்கம், மெட்ராஸ் பிரஸ் லேபர் யூனியன், சுருட்டு தொழிலாளர் சங்கம், கார்ப்பரேஷன் தொழிலாளர் சங்கம், தென்னிந்திய ரயில்வே தொழிற்சங்கம் (எழும்பூர் கிளை) ஸ்பென்சர் தொழிலாளர் சங்கம், ஆட்டோ மொபைல் தொழிலாளர் சங்கம், மாணவர் சம்மேளனம் (M.S.O) முதலிய ஸ்தாபனங்கள் கூட்டாக கையெழுத்திட்டு ஒரு நோட்டீசை வெளியிட்டனர். 5 தேதி அன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி தொழிலாளி வர்க்கத்தை குறிப்பாகவும், சென்னை பொதுமக்களை பொதுவாகவும் கேட்டுக் கொண்டனர்.

காலை 8 மணிக்கு சென்னை ஜனங்களில் பலரை எழுப்பிடும் டிராம் வண்டிகள் அன்று அவர்களை எழுப்பி விடவில்லை, செங்கொடியை பிடித்துக் கொண்டு “கப்பற்படையினரை பழிவாங்காதே” என்று கோஷித்துக்கொண்டு ட்ராம் செட்டில் இருந்து தொழிலாளர்கள் புறப்பட்டனர். அதற்குள்ளே மற்ற இடங்களில் உள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து, இந்த ஊர்வலத்தில் சேர்ந்து கொண்டனர். பஸ் தொழிலாளர்கள் தாங்கள் ஓட்டி வந்த பஸ்களை திரும்பவும் செட்களில் கொண்டு போய் விட்டு விட்டனர். பிஅண்ட் சி தொழிலாளர்கள் உட்பட சகல தொழிலாளர்களும் பிறகு வேலை நிறுத்தம் செய்தனர்.

தொழிலாளி வர்க்கத்தை பின்பற்றினர் மற்ற மக்கள், எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டன. மாணவர்கள் பள்ளிக்கூடங்களை விட்டு வெளியேறி விட்டனர். முஸ்லிம்கள் பரிபூரணமாக ஒத்துழைத்தனர். தங்கள் கடைகளை மூடிவிட்டனர்.

காங்கிரஸ், லீக், கம்யூனிஸ்ட் கொடிகளுடன் மாபெரும் ஊர்வலம் திலகர் கட்டடத்திற்குச் சென்றது. பின் பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தோனேசியா தேசபக்தர் தோழர் டுய், தோழர்கள் ராமநாதன், ஜீவானந்தம், சோமசுந்தரம், பரமேஸ்வரன் ஆகியோர் ஏகாதிபத்தியத்தைக் கண்டித்துப் பேசினர்.

ஊர்வலத்தினருக்கு ஆத்திரமூட்ட அநேக இடங்களில் போலீஸ் முயற்சித்தது. அதற்கு இரையாகாமல், ஒவ்வொரு நெருக்கடியான சந்தர்ப்பத்திலும் ஜனங்களை கட்டுப்பாட்டுடன் அமைதியாக நடத்தி சென்றது தொழிலாளி வர்க தொண்டர்களுக்கு தனி பெருமையை அளிக்கிறது.

சென்னையிலே இதுவரை என்றும் இவ்விதம் நிகழ்ந்ததில்லை என்று எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள்.

## பொன்மலையிலும் திருச்சியிலும்

பம்பாயில் ராணுவ அடக்குமுறை ஆட்சியை கண்டித்து, இன்று திருச்சியில் மாபெரும் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. திருச்சி, ஸ்ரீரங்கம் பஸ் போக்குவரத்து நின்று விட்டது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். குதிரை, மாட்டுவண்டி தொழிலாளர்களும், சுருட்டு தொழிலாளரும் வேலை செய்யவில்லை.

பொன்மலை ரயில்வே ஓர்க் ஷாப் தொழிலாளரும் வேலை செய்யவில்லை.

பள்ளிக்கூட மாணவர்களும் ஹர்த்தாலில் பங்கெடுத்துக் கொண்டனர்.


வன்னி மரத்தடியில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் தோழர்கள் எம். கல்யாணசுந்தரம், கே. பாலதண்டாயுதம் ஆகியோர் பேசினார்கள். இந்திய கப்பற்படை வீரர்களின் கோரிக்கைகளை ஆதரித்தும், பம்பாய் மக்கள் மீது போலீசும், ராணுவமும் சுட்டதை கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அமைதியுடனும், கட்டுப்பாட்டுடனும் தொழிலாளி வர்க்கம் நடந்து கொண்டது.

**ஜனசக்தி, 27.02.1946**

# மாலுமிகளைக் கைவிடோம்!

## 1946 கப்பற்படை எழுச்சி




கடந்த வாரத்தில் இந்தியாவின் முக்கியமான நகரங்களில் பம்பாய், கல்கத்தா, கராச்சி, சென்னை, நாகபுரி, அகமதாபாத் நகரங்களில் ஜனசக்தி, ஏகாதிபத்தியத்தை வெட்டி வீழ்த்தும் சுதந்திரப் படை அணிவகுத்து நின்றது.

பம்பாயில் ஆரம்பித்த இந்திய மாலுமிகளின் போர்க் கோலத்தை ஆதரித்து பம்பாய் தொழிலாளர் வர்க்கம் எழுந்தது. ஏகாதிபத்தியம் துப்பாக்கி ஏந்தி, பீரங்கிகளை நிறுத்தி ஜனங்களில் ஆதரவை நசுக்க பார்த்தது. இந்தக் கோர அடக்குமுறை ஆட்சியை அனுமதியோம் என்று வீறு கொண்டு எழுந்தனர். மற்ற நகரங்களில் உள்ள தொழிலாளிகள், மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் பக்கபலமாக நின்றனர். ஏகதிபத்திய வெறுப்புணர்ச்சி எங்கும் கொழுந்து விட்டு எரிந்தது.

இந்திய மாலுமிகள் கோரியது என்ன? தங்களுக்கு வெள்ளையருடன் சரிசமமான அந்தஸ்து வேண்டும் என்றனர். இந்திய தேசிய ராணுவ வீரர்களை விசாரிக்க கூடாது. அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்றனர். இந்தோனேசியாவில் இருந்து படைகளை வாபஸ் வாங்க வேண்டும் என்றனர்.

அவர்களை கலகக்காரர்கள் என்றது ஏகாதிபத்தியம், “கப்பற்படையை அழிக்க வேண்டியிருந்தாலும் அழிப்பேன். ஆனால், கலகத்தை அனுமதிக்க மாட்டேன்” என்று அட்மிரல் காட்பிரே கூறினார்.

பொதுமக்கள் அவர்களை சுதந்திர வீரர்கள் என்கின்றனர். வெளிநாட்டு பத்திரிகைகள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தித்தை எதிர்க்கும் புரட்சி, ஏகாதிபத்திய அடக்குமுறையை எதிர்த்து கிளம்பிய பொது ஜன விடுதலை இயக்கம் என்று கூறுகின்றனர்.

“பிரிட்டிஷ் ஆட்சியின் அந்திம காலம் வந்துவிட்டது... இன்று கப்பற்படையிலும், ஆகாய, விமானப்படையிலும் காணப்படும் அதிருப்தி காலச்சக்கரத்தின் அறிகுறி, தங்கள் சர்வீஸ்சுக்குட்பட்டு நடப்பதா? உள்ளத்தில் எழும் சுதந்திர ஆர்வத்திற்கு ஏற்றபடி நடப்பதா என்று சஞ்சலம் ஐ.சி.எஸ். அதிகார வர்க்கத்தையே பிடித்து விட்டது’ என்று பிரிட்டனில் இருந்து இந்தியாவுக்கு வந்து சென்ற அரசியல் சீர்திருத்த கமிஷனர் எச் பி.ஹட்சன் ஒலி பரப்பினார்.

இந்திய மாலுமிகளின் ஸ்ட்ரைக் கமிட்டி காங்கிரஸ், லீக், கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவை கோரியது. கம்யூனிஸ்ட் கட்சி மற்ற கட்சிகளையும் அழைத்தது. பொதுவேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்றது.

காங்கிரஸ் காரிய கமிட்டி அங்கத்தினர் பட்டேலும் பம்பாய் காங்கிரஸ் தலைவர்களும் வேலை நிறுத்தம் கூடாது, ஹர்த்தால் வேண்டாம் என்றனர். எனினும் 3 லட்சம் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தனர். பிரிட்டிஷ் ராணுவ பலத்தை கொண்டு ஏகாதிபத்தியம் பொதுமக்களை சுட்டு வீழ்த்தியது. 210 பேர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானர்களுக்கு துப்பாக்கி காயம்.

காங்கிரஸ் தலைவர்களுக்கு சேனாதிபதி வாக்குறுதி அளித்தார். மாலுமிகளை சரணடைய சொன்ன பட்டேல், ஒருவரையும் பழிவாங்க மாட்டோம் என்றது சர்க்கார். ஆனால் சேனாதிபதி ஆகின் லக் “கோரிக்கைகளுக்கு இணங்க முடியாது. கலகத்திற்கு காரணமாக இருந்தவர்களைத் தண்டிப்போம்“ என்று 25ஆம் தேதி பேசினார்.

கலகத்துக்கு காரணம் பஞ்சமும், கம்யூனிஸ்டுகளும் என்று அட்லி பேசுகிறார். ஆனால், காங்கிரஸ் தலைவர்கள் சுதந்திரம் வந்து விட்டது என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள். கேபினட் தூது கோஷ்டி வந்தவுடன் சமரசம் பேசி முடித்து விடலாம் என்று எண்ணுகிறார்கள். காங்கிரஸ் தலைவர்களின் கம்யூனிஸ்ட் துவேஷத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சுதந்திரப் போரின் முன்னணிப் படையை உடைத்து விடலாம் என்று பார்க்கிறார் அட்லி. சோவியத் எதிர்ப்பைக் கிளப்பி விட்டு சமரசம் பேசலாம் என்று பார்க்கிறார்கள்.

காங்கிரஸ் தலைவர்களும் இதற்கு இசைந்தால், தங்கள் கையிலே அதிகாரம் கிடைத்துவிடும், மற்ற கட்சிகளை ஒரு கை பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணக்கூடும். இந்த பிளவை பயன்படுத்திக் கொள்வார்கள் ஏகாதிபத்தியம்.

அதனால்தான் இன்று மாலுமிகள் விஷயத்தில் விசாரணை செய்து தண்டிப்போம் என்று சேனாதிபதியே பேசுகிறார். பொதுஜன எழுச்சி ஒற்றுமை சின்னத்துடன், ஏகாதிபத்திய எதிர்ப்பிலே திரண்டு வருகையில், அதை தடைபடுத்தித் தனி நலம் கருதிக் கொண்டு காங்கிரஸ் தலைவர்கள் நின்றால், நமக்கு சுதந்திரம் கிடைக்கும் நன்னாள் தூர விலகும்.

காங்கிரஸ்காரர்களும், லீகர்களும், கம்யூனிஸ்ட்களும் இன்று இந்திய மாலுமிகளின் போராட்டத்தை, நடத்திய வீரர்களை கைவிடாமல், ஏகாதிபத்தியம் அவர்களை பழிவாங்காமல், இப்பிரச்சனையில் விடாது கிளர்ச்சி செய்ய வேண்டும்.

**ஜனசக்தி 27.02.1946 தலையங்கம்**

## ஜனசக்தியின் 15 ஆண்டு...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

இருக்கும் பொருட்டு, சகல கஷ்டங்களுக்கும் இடையே சென்ற அக்டோபரில் வார இதழாக மீண்டும் பிறந்த ஜனசக்தி, டிசம்பர் மாதத்தில் ஜனசக்தி தினசரியாக வெளிவந்தது. பண வசதியின்மையால் செய்திகளை தாங்கிக் கொண்டு பெரிய தினசரியாக வர முடியவில்லை. ஆயினும் தேர்தல் இயக்கத்திற்கு ஜனசக்தி செய்த சேவை மகத்தானது. தமிழ்நாட்டு மக்களிடையே ஜனநாயக முன்னணி என்ற கருத்தை வெகுவாக பரப்பிய பெருமை ஜனசக்தியைச் சாரும்.

தேர்தலுக்குப் பிறகு பிற்போக்கு சக்திகளின் கேடயமாக விளங்கும் காங்கிரசுக்கும், ஜனநாயக சக்திகளுக்கும் இடையே நடந்து வரும் போராட்டம் தீவிரப்பட்டு புதிய கட்டத்தை எய்தி விட்டது.

### புதிய கட்டத்தில் பெரிய உருவம்

இதைப் பிரதிபலிக்கும் முறையில் தான் இன்று ஜனசக்தி புதிய உருவத்தில் வெளி வருகிறது ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் மேலும் தீவிரமாக பணியாற்றுவதற்காகவே இவ்வாறு வெளிவருகிறது.

இன்று பத்திரிகையை இந்த அளவில் கொண்டு வருவதில் கஷ்டங்கள் அனந்தம். கையில் பணம் இல்லை. சிறிதளவு தான் வசூல் செய்ய முடிந்தது. கடன் வாங்கி எப்படியாவது பத்திரிக்கையை நடத்துவது என்ற ஆர்வம்தான் இவ்வளவு சீக்கிரமாக பத்திரிக்கையை கொண்டு வர முடிந்ததற்கு காரணம்.

ஜனசக்தியின் சரித்திரம், தமிழ்நாட்டு ஜனநாயக இயக்கத்தின் சரித்திரம். ஜனநாயக இயக்கத்தை ஏகாதிபத்தியத்தால் அழிக்க முடியவில்லை. காங்கிரஸ் சர்க்காராலும் அழிக்க முடியவில்லை. ஆகவே தான் ஜனசக்தியையும் அவர்களால் அழிக்க முடியவில்லை.

இவ்வளவு அடக்குமுறைகளையும் சமாளித்து ஜனசக்தியை வளர்த்த தமிழ் மக்கள், தற்போது பண கஷ்டத்தை போக்க முன்வருவார்கள் என்பது நிச்சயம்.

ஏனென்றால் இது அவர்களின் பத்திரிக்கை. அவர்களது நல்வாழ்வுக்காக போராட்டத்தில் சக்தி வாய்ந்த ஆயுதம் என்பது அவர்களுக்கு தெரியும்.

ஜனநாயகம் ஓங்குக!
வாழ்க ஜனசக்தி!

**ஜனசக்தி, நாள் 12.7.1952**

## சமூக விடுதலையை முன்னெடுத்த...

7 ஆம் பக்கத் தொடர்ச்சி

முயற்சி என்பவற்றால் அச்சத்தில் அடிபணிந்து கிடந்த தாழ்த்தப்பட்டோர் உள்ளிட்ட அனைவரையும் தலை நிமிர்ந்து நிற்கச் செய்தது சமூக விடுதலை என்ற பெரும் கருவிதான். இவற்றினூடாக எழுந்த நெருப்பில் தீண்டாமையும் பொசுங்கிவருகிறது.

களப்பால் குப்பு, மணலூர் மணியம்மா, வாட்டாகுடி இரணியன், சாம்பவானோடை சிவராமன், ஆம்பலாப்பட்டு ஆறுமுகம் போன்ற நூற்றுக்கணக்கானோரின் ஈகைதான் அடிமைத் தளைகளை நொறுக்கி, கீழ்நிலை மக்கள் மேன்மை பெறத்துணை நின்றன. பொருளியல் போராட்டங்களை அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்வதில் பல தடைகளை உடைக்கவேண்டும்.

ஆயினும், சமூக விடுதலை பல தலைமுறைகளையும் தாண்டி நிற்பதாகும்; நிலைப்பதாகும். பொருளியப் பயன் பெறுவதும். கல்வியினால் அரசுப் பணி போன்ற வாய்ப்புகளை அடைவதும் சமூக விடுதலையைக் கொடுத்துவிடுவதில்லை.

ஆனால், சமூக விடுதலை ஏற்படுகின்றபொழுது பொருளிய மேனிலை, வேலை வாய்ப்புகள் என அனைத்தையும் பெறுதற்கான அடிப்படைகள் உருவாகிவிடுகின்றன.

இந்திய ஒன்றியத்தில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களுக்கும் எடுத்துக்காட்டாகத் தமிழகத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இத்தகையதொரு சமூக மறுமலர்ச்சிப் போராட்டம் நடைபெற்றது என்பது சிறப்புடன் நோக்கத்தக்கதாகும்.

இதனை இன்று வரை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான விவசாயத் தொழிலாளர் சங்கமும் விவசாயிகள் சங்கமும் தொடர்கின்றன என்பது வரலாற்றில் பொறிக்கத் தக்கதாகும்.

தொடர்புக்கு : 9444075561

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு
26 ஆவது மாநில மாநாடு
2025 ஆகஸ்ட் 15 16 17 18 சேலம்

# மறக்கப்பட்ட இரு இந்திய விடுதலைப் போராளிகள்

**இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஒரு முக்கியக் கட்டமாக அமைந்தது சுதேசி இயக்கமாகும். ஆங்கில அரசிடம் விண்ணப்பங்கள் வழி விடுதலை வேண்டிக் கொண்டிருந்த இந்திய தேசியக் காங்கிரசின் செயல்முறையில் ஒரு மாற்றத்தை அது ஏற்படுத்தியது.**

சுயராச்சியம் என்ற நம்மை நாமே ஆளும் அரசியல் விடுதலையை மட்டும் முன் நிறுத்தாமல், சுதேசித் தொழில் முயற்சி, அந்நியப் பொருள் புறக்கணிப்பு, தேசியக்கல்வி என்பனவற்றையும் முக்கியக் குறிக்கோள்களாக முன்வைத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக வெகுமக்கள் இயக்கமாக அது மாற்றமடைந்தது. 1905 இல் தொடங்கி 1908 வரை இதன் தாக்கம் இந்தியாவில் மேலோங்கியிருந்தது.

தமிழ் நாட்டிலும் சுதேசி இயக்கம் கால்கொண்டது. பாரதியார், வ.உ.சி, சுப்பிரமணிய சிவா, ஜி.சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் இதை வளர்த்தெடுப்பதில் முன்னின்றனர்





வைரப்பன் மற்றும் நினைவுத்தூண்

### கோரல் மில் வேலை நிறுத்தம்

தூத்துக்குடியில் வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்த வ.உ.சி தம், பூர்வீக ஊரான ஒட்டப்பிடாரத்தில் வாழும் போதே 1898இல் இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகிவிட்டார். 1900 இல் தூத்துக்குடிக்கு இடம்பெயர்ந்த அவர் விடுதலை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். அங்கு அவர் நடத்திய வேலை நிறுத்தம் அகில இந்தியாவின் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது.

### கோரல் மில் வேலை நிறுத்தம் - 1908

ஆண்ட்ரு ஹார்வி, பிராங்ஹார்வி என்ற இரு ஆங்கிலேயச் சகோதரர்கள் பருத்தி நெசவாலை ஒன்றை கோரல் மில் என்ற பெயரில் 1888 இல் தூத்துக்குடியில் நிறுவினார்கள். இங்கு பணியாற்றிய தொழிலாளர்களின் ஊதியம், பணிச்சூழல் என்பன மிகவும் கீழான நிலையில் இருந்தன. இவர்களின் நலனை முன்நிறுத்தி, பத்மநாப அய்யங்கார், சுப்பிரமணிய சிவா ஆகியோருடன் இணைந்து 1908 பிப்ரவரி 27 இல் வேலை நிறுத்தம் ஒன்றை வ.உ.சி தொடங்கினார். இவ்வேலை நிறுத்தம், தொழிற்சாலை என்ற எல்லையைக் கடந்து பொதுமக்கள் என்ற பரந்த தளத்திற்குள் நுழைந்தது.

வ.உ.சியும், சிவாவும் நாள்தோறும் நடத்திய பொதுக் கூட்டங்களில் வேலைநிறுத்தம் குறித்து மட்டும் உரையாற்றவில்லை. ஆங்கில ஆட்சிக்கு எதிரான கருத்துக்களையும் முன்வைத்தனர். மக்களை அரசுக்கு எதிராகத் தூண்டும் உரைகளாக (Seditious) நோக்கியது. இவர்களது உரைகளால் உந்தப்பட்ட பொதுமக்களில் ஒருவராக மருத்துவக் குலம் சேர்ந்த ஒருவர் இருந்துள்ளார். மருத்துவக் குலம் சேர்ந்தோரில் ஒரு சிலர் மயிர் திருத்தும் பணியும் மேற்கொண்டிருந்தமையால் இவர்களை "மயிர்வினைஞர்" என்று திவாகர நிகண்டு (2:49) குறிப்பிடும். இவர்களது தொழிற்கருவிகளில் ஒன்றான கத்தரிக்கோலை 'மயிர் குறை கருவி' என்று சங்க இலக்கியமான பொருநராற்றுப்படை (வரி:9) குறிப்பிடுவதால் இவர்களது தொன்மை புலப்படுகிறது. தூத்துக்குடி நகரில் இப்பணி மேற்கொண்டிருந்த ஒருவர் சுதேசி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவராக இருந்துள்ளார்.

தூத்துக்குடி நகரமக்களிடையே உருவான எழுச்சியை அடக்கும் வழிமுறை குறித்துப் பிரமுகர்கள் கூட்டம் ஒன்றை உதவி ஆட்சியாளராக இருந்த ஆஷ் என்ற ஐரோப்பியர் கூட்டினார். அக்கூட்டத்தில் ரங்கசாமி அய்யங்கார் என்ற வழக்கறிஞரும் கலந்து கொண்டார். இவர் தூத்துக்குடி நகராட்சியின் நியமன உறுப்பினரும் கூட. தூத்துக்குடி மக்களின் எழுச்சியை அடக்க காவல்துறையைப் பலப்படுத்த வேண்டும் என்ற உதவி ஆட்சியாளரின் கருத்தை இவர் ஆதரித்துள்ளார்.

இக்கூட்டம் நடந்த மறுநாள் முகம் மழித்துக் கொள்ள முன்னர் குறிப்பிட்ட மயிர்வினைஞரை அழைத்து அவர்முன் அமர்ந்தார். அவரும் தன் பணியை மேற்கொண்டவாறே, மக்களை அடக்க வெளியூர்களில் இருந்து காவலர்களை வரவழைத்துக் காவலர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற உதவி ஆட்சியரின் கருத்தை அவர் ஆதரித்தது உண்மைதானா? என்று வினவினார். இது உன்வேலையல்ல என்று வழக்கறிஞர் கூற, அப்படியானால் இது எனது வேலையல்ல என்று கூறி, முகமழிப்பை முடிக்காமல் பாதியிலேயே நிறுத்திவிட்டு அவர் எழுந்து சென்று விட்டார்.

வழக்கறிஞர் ஏனைய மயிர்வினைஞர்களை அழைத்த போது அவர்கள் வர மறுத்துவிட்டார்கள். குதிரை வண்டி ஓட்டுபவர்கள் அவருக்கு வண்டியோட்ட மறுத்துவிட்டார்கள். உணவுவிடுதி நடத்துபவர்கள் அவருக்கு உணவு விற்க மறுத்துவிட்டார்கள். இச்செய்திகள் அனைத்தும் 05.03.1908 இந்து நாளேட்டில் A Barber Refuse to Shave' என்ற தலைப்புடன் வெளிவந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக 06.03.1908 இந்து நாளேட்டில் மற்றொரு செய்தியும் வெளியாகியுள்ளது. அச்செய்தியின்படி அவரது சலவைத் தொழிலாளி சலவை செய்ய மறுத்ததுடன் ஏற்கெனவே எடுத்துச் சென்ற துணிகளைத் திருப்பிக் கொடுக்கவும் மறுத்துவிட்டார்.

இதையடுத்து தூத்துக்குடியில் வாழமுடியாத சூழலில் அவர் காவல்துறையின் துணையுடன் இடம் பெயர்ந்து திருச்சிக்குச் சென்றுவிட்டதாக சுதேசமித்திரன் நாளேட்டில் நான்கு வரிச் செய்தியொன்று வெளியாகியுள்ளது. இவரது பெயர் பதிவான நிலையில் மேற்கூறிய மயிர் வினைஞரது பெயர் பதிவாகாமல் போய்விட்டது.

### உப்பு அறப்போர் 1930

இந்திய தேசியக் காங்கிரஸ் அமைப்பில் காந்தியின் தலைமை அறிமுகமான பின்னர் வட்டார அளவிலும் அகில இந்திய அளவிலும் சில போராட்டங்களை நடத்தினார். அவற்றுள் ஒன்று உப்புச் சத்தியாகிரகம் என்ற போராட்டமாகும். உப்பு மீது ஆங்கிலேயர் விதித்த வரியை நீக்குவது இதன் முக்கிய நோக்கமாகும். குஜராத் மாநிலத்தில் உள்ள தண்டி என்ற கடற்கரைக் கிராமத்திற்கு காங்கிரஸ் கட்சியின் தொண்டர்களுடன் நடைப்பயணம் மேற்கொண்ட காந்தி தடையை மீறி 1930 மாரச் 12 இல் உப்பெடுத்துக் கைதானார். இதுவே தண்டி சத்தியாகிரகம் என நம் பள்ளிப் பாட நூல்களில் இடம் பெற்றுள்ளது. (1927 மார்ச்சில் மகத் என்ற ஊரில் உள்ள சௌதார் குளத்திற்கு ஆயிரக்கணக்கான தலித்துகளுடன் ஊர்வலமாகச் சென்று ஆதிக்கச் சாதியினரின் தடையை மீறி ஆளுக்கு ஒரு கையளவு தண்ணீரைப் பருகிய அம்பேத்கரின் மகத் போராட்டம் நம் பாடநூல்களில் இடம் பெறுவதில்லை.)

உப்பு அறப்போரின் தாக்கத்தால் தமிழ் நாட்டிலும் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள வேதாரண்யத்திலும் உப்பு அறப்போர் இராஜாஜியின் தலைமையில் நடந்தது. (இராஜாஜி கைதானால் தலைமை ஏற்று நடத்தும் பொறுப்பு முதலில் திரு.வி.க. விடம் வழங்கப்பட்டதாகவும் பின்னர் அவருக்குத் தெரியாமலேயே அதில் அவரது பெயர் விடுபட்டு சந்தானத்தின் பெயர் சேரக்கப்பட்டதாகவும் தன் வாழ்க்கைக் குறிப்பில் திரு.வி.க பதிவு செய்துள்ளார்).

1930 இல் தொண்ணூற்றெட்டு தொண்டர்களுடன் புறப்பட்ட தொண்டர்படை ஏப்ரல் மாதம் வேதாரண்யம் சென்றடைந்தது. இவர்கள் வரும் முன்பே அங்கு காவலர்கள் குவிக்கப்பட்டிருந்தனர். காவலர்களில் சிலர் சீருடை அணியாது மக்களுடன் மக்களாக உலவிக் கொண்டிருந்தனர். இவர்களில் ஒருவர் முகம் மழித்துக் கொள்ள விரும்பி இப்பணியை மேற்கொண்டிருந்த ஒருவரை அணுகினார். அவர் அணுகியது வைரப்பன் என்ற பெயர் கொண்ட பதினாறு வயது பதின்ம வயதுக்காரரை. ஏற்கெனவே உப்பு அறப்போருக்கு எதிரானவர்களுக்குத் தொழில் செய்வதில்லை என்ற முடிவை அப்பகுதி மருத்துவகுலத்தினர் எடுத்திருந்தனர். வந்த காவலர் சீருடையில் இல்லாததால் அவரை அடையாளம் காணமுடியாத நிலையில் வைரப்பன் தன் பணியைத் தொடங்கினார்.

தற்செயலாக அங்குவந்த ஒருவர், வைரப்பன் பணி செய்து கொண்டிருப்பது ஒரு காவலருக்கு என்பதைக் குறிப்பால் உணர்த்தினார். முகமழிப்பு முற்றுப் பெறாத நிலையில் அதை நிறுத்திவிட்டு எழுந்தார். காவலர் அச்சுறுத்தியும் அதைப் பொருட்படுத்தவில்லை. பின்னர் இந்நிகழ்வு அப்போதைய தஞ்சை மாவட்டத்தின் ஆட்சித் தலைவராய் இருந்த தாரன் என்பவரின் பார்வைக்குச் சென்றது. அவர் வேதாராண்யத்தில் முகாமிட்டு உப்பு அறப்போரைத் தோல்வியடையச் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் இயங்கிக் கொண்டிருந்தவர். இவரைக் குறித்து. ராஜாஜி 'காங்கிரஸ் சத்தியாகிரகிகளுக்கு இடமோ உணவோ கொடுப்போர் யாவரும் அபராதமும் சிறைத்தண்டனையும் பெறக்கூடிய குற்றம் செய்தவராவர் என ஜில்லாவெங்கும் பறை சாற்றினார்.' என்று எழுதியுள்ளதுடன் இச்செய்தியைத் துண்டறிக்கை, தண்டோரா போடுவன் மூலம் மக்களிடம் பரப்பினார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய மனப்போக்கில் இருந்த தாரன் வைரப்பனை அழைத்து முகமழிப்பை முழுமையாகச் செய்ய வேண்டும் என்றும் இல்லையேல் ஆறுமாதச் சிறைத்தண்டனை விதித்துவிடுவேன் என்றும் அச்சுறுத்தினார். வைரப்பன் அவரது அச்சுறுத்தலுக்குப் பணியாத நிலையில் ஆறுமாத சிறைத்தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது.

அவரது உறுதிப்பாடும் பயமின்மையும் மக்கள் உள்ளத்தைத் தொட்ட நிலையில் அவரது பணியைப் போற்றும் பாடல்கள் உருவாகி வாய்மொழிப் பாடல்களாக வழங்கலாயின. பிந்தைய தலைமுறையினர் இவற்றை மறந்த நிலையில் சின்னப்பன் என்ற முனைவர் பட்ட ஆய்வாளர் பின்வரும் தொடர்களைச் சேகரித்துத் தன் முனைவர் பட்ட ஆய்வேட்டில் பதிவிட்டுள்ளார்:

**ஆதிக்கத்தார் போலிசுக்கே**
**பாதிமுகம் மழித்தார்**
**மீதிமுகம் கலெக்டருக்கே**
**பங்காக அளித்தார்.**
**மருத்துவக் குலத்தில் பிறந்த**
**மாமகனே பெரும்**
**மாண்புடன் வாழ்ந்த**
**சேவகனே!**

பாடநூல்களிலும் வரலாற்று நூல்களிலும் ராஜாஜியும் சர்தார் வேதரத்தினமும் முதன்மை பெற்ற நிலையில் மக்கள் உள்ளத்தில் வைரப்பன் இடம் பெற்றுவிட்டார். அவரது நினைவாக நினைவுத்தூண் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. ஆனால் வரலாற்று நூல்கள் உரிய இடத்தை வழங்கத் தவறவிட்டன.

ஓர் இயக்கம் என்பது மக்கள் இயக்கமாக வளர்ச்சியுறும் போது சாமனியர் என்போரது பங்களிப்பு தானாகவே வந்துசேரும் என்பதற்கு இந்நிகழ்வுகள் எடுத்துக்காட்டாக அமைகின்றன.

தொடர்புக்கு: 9442053606



ஆ.சிவசுப்பிரமணியன்

### வைரப்பனைச் சிறப்பித்த மாநிலச் செயலாளர்

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தஞ்சை மாவட்ட மாநாடு 1983ல் வேதாரண்யத்தில் நடந்த போது, வைரப்பன் அவர்களை அழைத்து சிறப்பித்தபோதுதான் அவரை வெளியுலகம் அறிந்தது. சர்தார் வேதரத்தினம் பிள்ளை மூலம் தகவல் அறிந்து அவரை மேடைக்கு அழைத்து வந்தவர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இன்றைய மாநிலச் செயலாளரான இரா.முத்தரசன்.

மறக்கப்பட்ட இரு இந்திய விடுதலைப் போராளிகள்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு 26 ஆவது மாநில மாநாடு
2025 ஆகஸ்ட் 15 16 17 18 சேலம்

# கம்யூனிஸ்டுகளும் வெள்ளையனே வெளியேறு இயக்கமும்!

**ஆகஸ்ட் புரட்சி என்றும் அழைக்கப்படும் வெள்ளையனே வெளியேறு இயக்கம் நாடு தழுவிய சட்டமறுப்பு இயக்கமாகும்.**

இதற்காக ஆகஸ்ட் 7, 1942 அன்று அகில இந்திய காங்கிரஸின் பம்பாய் அமர்வில் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆகஸ்ட் 8 அன்று மும்பையில் கோவாலியா டேங்க் மைதானத்தில் காந்தி ஆற்றிய வெள்ளையனே வெளியேறு உரையில் "செய் அல்லது செத்து மடி" என்ற முழக்கத்தை எழுப்பினார்.

ஆகஸ்ட் 8 ஆம் தேதியே பிரிட்டிஷ் அரசு பெருமளவில் தடுப்புக் காவல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. காந்தி உட்பட காங்கிரசின் உயர்மட்டத் தலைவர்கள், 100,000 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். பெருமளவில் அபராதமும் விதிக்கப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் பொதுவில் கசையடிக்கு உட்படுத்தப்பட்டனர். இதனை ஒட்டி நடைபெற்ற போராட்டங்களில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர், பலர் காவல்துறை மற்றும் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பல தேசியத் தலைவர்கள் தலைமறைவாகி, ரகசிய வானொலி நிலையங்கள் மூலம் செய்திகளை ஒளிபரப்பி, துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து, இணையான அரசாங்கங்களை நிறுவி தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். மூவர்ணக் கொடியைப் பகிரங்கமாக ஏந்திய குற்றத்திற்காக எண்ணற்ற தேசபக்த இந்தியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

### பிரிட்டிஷாரை விஞ்சிய விசுவாசம்!

அதற்கு முன்பே மைசூரில் ஒரு பயங்கரமான படுகொலை நடந்தது. அங்கு இந்து மகாசபா மற்றும் ஆர்எஸ்எஸ்ஸுடன் மிகவும் நெருக்கமாக இருந்த மைசூர் ராஜாவின் ஆயுதப் படைகள், மூவர்ணக் கொடியை வணங்கியதற்காக 22 காங்கிரஸ் செயல்பாட்டாளர்களைச் சுட்டுக் கொன்றது.

காங்கிரசை தேச விரோத மற்றும் சட்டவிரோத அமைப்பு என்று அறிவித்த பிறகு, பிரிட்டிஷ் எஜமானர்கள் இந்து மகாசபை மற்றும் முஸ்லிம் லீக்கை மட்டுமே செயல்பட அனுமதித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கம்யூனிஸ்டுகளின் நிலை!

காங்கிரஸ் தலைவர் ஜவஹர்லால் நேரு வழியில் தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஹிட்லரின் பாசிசத்தை எதிர்த்த போராட்டத்தில் ஈடுபட்டது. மரணப்படுக்கையில் இருந்த ரவீந்திரநாத் தாகூர் போரில் ரஷ்யாவின் நிலைமை குறித்து அடிக்கடி கேட்டு வந்ததும், இந்த வீரஞ்செறிந்த போராட்டத்தில் ரசியர்கள் வெல்ல வேண்டும் என்ற தனது செய்தியைக் கூறியதும் குறிப்பிடத்தக்கது.

ஹிட்லரின் பாசிசத்தை எதிர்த்து நாடு முழுவதும் ஜவஹர்லால் நேரு பரப்புரைப் பயணங்களை மேற்கொண்டார். இந்திய மக்களை இந்த இயக்கத்தில் ஈடுபடுத்த வேண்டும் என்று எண்ணிய கம்யூனிஸ்டுகள், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை ஆதரி க்கவில்லை. என்றபோதிலும் ஏராளமான கம்யூனிஸ்டுகள் அதில் பங்கேற்றனர். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை எதிர்ப்பதில் பாசிச எதிர்ப்பை ஒட்டிய பணிகளையும் தேசிய விடுதலைப் போராட்டப் பணிகளையும் இணைத்துச் செல்லாத ஒரு பெரிய நடைமுறை தவறைச் செய்ததாகப் பின்னர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒப்புக்கொண்டது.

ஆனால் அதையும் மீறி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கம்யூனிஸ்ட் பங்கேற்றனர். இந்த இயக்கத்தில் முதலில் களப்பலி ஆன மாணவர் கம்யூனிஸ்ட் ஹெமு கெலானி ஆவார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் புகழ்பெற்ற தளபதிகளான நானா பாட்டில், அஜய் முகர்ஜி, வீர் பகதூர் சிங், புகழ் பெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்க கதாநாயகி அருணா ஆசப் அலி ஆகியோர் பின்னர் தங்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில்தான் இணைத்துக் கொண்டனர் என்பதன் மூலம் கம்யூனிஸ்டுகள்தான் உண்மையான தேசபக்தர்கள் என்பது விளங்கும்.

1946 இல் நடைபெற்ற புகழ்பெற்ற கப்பல் படை எழுச்சிப் போராட்டத்தில் காங்கிரஸ் கட்சி ஒதுங்கி நின்றது. கம்யூனிஸ்டுகள் தான் முன்னணியில் நின்று நாடு முழுவதும் தொழிலாளர்களையும் மாணவர்களையும் திரட்டிப் பெரும் போராட்டங்களை நடத்தியது.

### வெள்ளையரை ஆதரித்த இந்துத்துவ முகாம்!

கம்யூனிஸ்ட்களை விமர்சனம் செய்யும் இந்து மகாசபை மற்றும் ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்கம் அடங்கிய அப்போதைய இந்துத்துவா முகாம் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் என்ன பங்கு வகித்தது?

இந்துத்துவா முகாம் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை எதிர்த்தது மட்டுமல்லாமல், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மக்கள் எழுச்சியை அடக்குவதில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குத் தனது பன்முக ஆதரவையும் வழங்கியது. இது தொடர்பாக, அதிர்ச்சியூட்டும் ஆவணங்கள் கிடைத்துள்ளன.

ஆர்.எஸ்.எஸ்ஸின் இரண்டாவது சர்சங்க்சாலக் எம்.எஸ்.கோல்வால்கர், தனது சிந்தனைக் கொத்து (தி பஞ்ச் ஆஃப் தாட்ஸ்) என்ற புத்தகத்தில், சுதந்திரப் போராட்டத்தை "பிராந்திய தேசியவாதம்" என்று கண்டனம் செய்தார்.


இது நமது உண்மையான இந்து தேசியத்தின் நேர்மறையான மற்றும் ஊக்கமளிக்கும் உள்ளடக்கத்தை இது தடுக்கக் கூடியது என்றும் கூறினார்.

இந்தப் புரிதலுடன்தான் 1925 இல் உருவாக்கப்பட்ட ஆர்.எஸ்.எஸ் இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் இருந்து விலகி நின்றது. சுதந்திரப் போராட்ட வீரர்களைக் காட்டிக் கொடுக்கவும் செய்தது.

ஆர்.எஸ்.எஸ் வெளியிட்ட ஹெட்கேவரின் வாழ்க்கை வரலாற்றில், "1930ல் காந்தி உப்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியபோது, சங்கம் சத்தியாக்கிரகத்தில் பங்கேற்காது என்ற தகவலை எல்லா இடங்களுக்கும் அனுப்பினார்" என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்த சத்தியாக்கிரகத்தில் பங்கேற்க விரும்பிய ஒரு மருத்துவருக்கும் ஹெட்கேவரால் அதில் பங்கேற்க விடாமல் தடுக்கப்பட்ட இன்னுமொரு மருத்துவருக்கும் இடையே நடந்த உரையாடலை கோல்வால்கர் மேற்கோள் காட்டுகிறார்.



நானா பாட்டில்



ஹெமு கெலானி



அருணா அசப் அலி

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ குறிப்பின்படி, ஆர்எஸ்எஸ் தலைவர்கள் உள்துறைச் செயலாளரைச் சந்தித்து, "சங்க உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் குடிமைக் காவலர்களுடன் சேர ஊக்குவிப்பதாகச் செயலாளருக்கு உறுதியளித்தனர்". இந்தக் குடிமைக் காவலர்களை பிரிட்டிஷ் அரசாங்கம் 'உள் பாதுகாப்புக்கான சிறப்பு நடவடிக்கைகளாக' உருவாக்கியது. இந்த உதவியை ஆங்கிலேயர்கள் ஒப்புக்கொண்டனர்.

சங்கம் சட்ட வழிகளுக்குள் தன்னைக் கவனமாக வைத்திருந்தது, குறிப்பாக, ஆகஸ்ட் 1942 இல் வெடித்த கலவரங்களில் பங்கேற்கவில்லை" என்று அரசாங்கக் குறிப்பாணை, பம்பாய் பிரசிடென்சி குறிப்பிடுகிறது.

1942 ஆம் ஆண்டு கான்பூரில் நடைபெற்ற இந்து மகாசபையின் 24 வது அமர்வில் உரையாற்றிய சாவர்க்கர், வெளிநாட்டு ஆட்சியாளர்களுடன் இணைந்து செயல்படும் இந்து மகாசபையின் உத்தியைப் பின்வரும் வார்த்தைகளில் கோடிட்டுக் காட்டினார்.

"அனைத்து நடைமுறை அரசியலுக்கும் தலைமை தாங்கும் கொள்கை பொறுப்புணர்வு மிக்க ஒத்துழைப்புக் கொள்கை என்று இந்து மகாசபை கருதுகிறது. இதன் காரணமாக, கவுன்சிலர்கள், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் எந்தவொரு நகராட்சி அல்லது பொது அமைப்புகளையும் நடத்தும் அனைத்து இந்து சங்கத்தினர், அரசாங்க அதிகார மையங்களைப் பயன்படுத்தி, மற்றவர்களின் நியாயமான நலன்களை ஆக்கிரமிக்காமல், இந்துக்களின் நியாயமான நலன்களைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் நமது தேசத்திற்கான 'தேசபக்த' சேவையை வழங்குகிறார்கள்.

அவர்கள் பணிபுரியும் வரம்புகளை அறிந்த மகாசபை, சூழ்நிலைகளில் தங்களால் இயன்ற நன்மையைச் செய்ய வேண்டும். நம்மிடம் உள்ள வளங்கள் மற்றும் நமது தேசிய நலனின் கட்டளைகளுக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று வி.டி.சாவர்க்கரின் இந்து ராஷ்ட்ர தர்ஷன், தொகுதி. 6 இல் மகாராஷ்டிரா பிராந்திக் இந்து சபா, பூனா, 1963, பக். 474 இல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எந்த அளவிற்கு பிரிட்டிஷாரின் கால்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து கிடந்தனர் என்பது தெளிவாகத் தெரியும்.

### பிரிட்டிஷ் ராணுவத்திற்கு ஆள் சேர்த்த சாவர்க்கர்!

சாவர்க்கரின் இந்து மகா சபை நாட்டின் பல்வேறு பகுதிகளில் பிரிட்டிஷ் படைக்கு ஆள்சேர்க்க போர் வாரியங்களை நிறுவியது. இதற்காக வைஸ்ராயின் தேசியப் பாதுகாப்புக் குழுவில் சாவர்க்கர் பரிந்துரைப்பவரை இணைப்பது என்று முடிவு செய்தது. அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்து தந்தியும் அனுப்பியுள்ளார் வீ(சோ)ர சவார்க்கர்.

பிரிட்டிஷ் எஜமானர்களுடனான இந்த ஒத்துழைப்பு' என்பது வெறும் ஒரு தத்துவார்த்த உறுதிமொழி மட்டுமல்ல. பிரிட்டிஷ் இராணுவத்தில் ஒரு லட்சம் இந்துக்களைச் சேர்த்துவிட்டதாக சாவர்க்கர் இந்து மகாசபை ஊழியர்களிடம் தெரிவித்தார்.

### முஸ்லிம் லீக் உடன் கூட்டணி வைத்த இந்து மகா சபா!

முஸ்லிம் லீக் உடன் காங்கிரஸ் தனது தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டவுடன் இந்து மகா சபா சிந்து மற்றும் வங்காளத்தில் முஸ்லிம் லீக் உடன் கூட்டணி அமைத்து ஆட்சியிலும் பங்கேற்றது. வங்காளத்தில் பசுல் ஹக் அமைச்சரவையில் டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி துணை முதல்வராகவும் நிதித்துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றார். இந்த அமைச்சரவைதான் தனி பாகிஸ்தான் கோரி தீர்மானம் இயற்றியது. இதுதான் அவர்களது உண்மையான தேச பக்தி!

இந்து மகாசபை 1942 இல் முஸ்லிம் லீக்குடன் அமைத்த கூட்டணி அரசாங்கங்களை நடத்தியது. கான்பூரில் நடந்த இந்து மகாசபையின் அதே அமர்வில் சாவர்க்கர் தனது தலைமை உரையில் இந்த உறவை நியாயப்படுத்தி பாதுகாத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசு நிலைத்திருக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அவசியம் என்ற வாதத்தின் பேரில், ஆர்.எஸ்.எஸ் மற்றும் இந்துத்துவ அமைப்புகள். வெளிப்படையாக அன்று ஆங்கிலேயர் பக்கம் நின்று, வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை எதிர்த்தனர். மறுபுறத்தில் ரத்தம் சிந்தி தியாகம் செய்து சுதந்திர வேள்வியில் தன்னைக் கரைத்துக் கொண்ட கம்யூனிஸ்டுகள் புரட்சிகர, தேசபக்தியின் மாபெரும் அடையாளமாயினர் என்பது ஒரு மாபெரும் வரலாற்று உண்மை! எனவேதான் வரலாற்றில் இடம் இல்லாத அவர்கள் புதிய பொய் வரலாற்றை உருவாக்கிக் கொண்டுள்ளனர்.



த.லெனின்
தொடர்புக்கு: 9444481703

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ்நாடு 26 ஆவது மாநில மாநாடு
2025 ஆகஸ்ட் 15 16 17 18 சேலம்

# சுதந்திரப் போராட்டத்தில் முற்போக்குக் கலைஞர்களின் பங்கு

■ **ஆனந்த் பாசு**

**இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் திரைப்படம் மற்றும் நாடகத் துறையில் முற்போக்கு, கம்யூனிஸ்ட் கலைஞர்கள் முக்கியப் பங்கு வகித்தனர்.**

அவர்கள் நேரடியாகப் போராட்டங்களில் ஈடுபட்டதோடு, கலை வடிவங்களைப் பயன்படுத்தி மக்கள் மனதில் விடுதலை உணர்வை ஊட்டி வளர்த்தனர்.

குறிப்பாக பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான நாடகங்கள் விடுதலைப் போரில் முக்கியப் பங்கு வகித்தன. கம்யூனிஸ்ட் இயக்கங்கள் சமூக நீதி, சமத்துவம், தொழிலாளர் உரிமைகள் போன்ற கருத்துக்களை இத்தகைய நாடகங்களின் மூலம் பரப்பினர்.

நாடகங்களில் சுரண்டலினால் பாதிக்கப்படும் தொழிலாளர்களின் பிரச்னைகள், விவசாயிகளின் மோசமான வாழ்க்கை நிலைமைகள் போன்றவை பிரதிபலிக்கப்பட்டன. மேலும், நாடகங்கள் மக்கள் மனதில் புரட்சிகர எண்ணங்களை விதைத்து, போராட்டங்களில் அவர்களை ஈடுபட வைக்கும் ஒரு கருவியாக மாறியது. எடுத்துக்காட்டாக, கம்யூனிஸ்ட் தோழர்கள் ஆங்கிலேய அரசுக்கு எதிராக ‘புரட்சி’ என்ற ஒரு நாடகத்தை நிகழ்த்தினர். சமூக நீதி, தொழிலாளர் உரிமைகள் ஆகியவற்றைக் கருப்பொருளாகக் கொண்ட ‘நீதி’ எனும் நாடகம் சுதந்திர வேட்கையைத் தூண்டியது.

மேலும், அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர்கள் சம்மேளனம் (1936) மற்றும் மக்கள் நாடகம் (1941) ஆகிய இயக்கங்களின் தொடர்ச்சியாக, கம்யூனிசச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு நாடகங்கள், பாடல்கள், கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்துவதற்காகவே, இப்டா எனப்படும் ‘இந்திய மக்கள் நாடக இயக்கம்’ (IPTA) 1943 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. பிரித்திவிராஜ் கபூர், பால்ராஜ் சஹானி, உத்பால் தத், ரித்விக் கட்டக், சலீல் சௌத்ரி, பண்டிட் ரவி சங்கர், காஃவாஜா அஹ்மத் அப்பாஸ் உள்ளிட்ட பலர் இதில் முக்கியப் பங்கு வகித்தனர்.

இன்றளவும், இப்டா 22 மாநிலங்களில் பல்லாயிரக்கணக்கான உறுப்பினர்களுடன் செயல்படுகிறது. இப்டா நாடகங்கள் மக்கள் மொழியில், பாடல்களுடன் நிகழ்த்தப்பட்டதால், விடுதலை இயக்கத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின; அரசியல் கலந்த கலை எனும் கலவையை உருவாக்கின. “பசிக்காகப் பாடும் குரல்”, “விடுதலை வேட்கை” போன்ற பாடல்கள் பெரும் வரவேற்பைப் பெற்றன. யதார்த்த நாடகத்திற்கு வித்திட்டது இப்டா.

‘இப்டா’வின் தென்னிந்தியக் கிளையாக, பிரஜா நாட்டிய இயக்கம் (Praja Natya Mandali) தமிழ்நாட்டிலும் செயல்பட்டது. இதன் நாடகங்கள் தமிழ் இலக்கியம், பாரம்பரிய கலை மற்றும் புதிய அரசியல் சிந்தனைகள் ஆகியவை சந்திக்கும் புள்ளியாக இருந்தன. கிராமங்களில், தொழிலாளர் குடியிருப்புகளில், கூட்டங்களில் நிகழ்த்தப்பட்ட இந்த நாடகங்கள், “தொழிலாளர்களைத் திரட்டுதல்”, “விவசாயிகளின் உரிமைகள்” போன்ற கருப்பொருள்களைக் கொண்டு கிராமச் சூழலுக்கு ஏற்ப எளிய காட்சிகளாய் வடிவமைக்கப்பட்டன.

மேலும், 1930 மற்றும் 40களில் வெளியான திரைப்படங்கள், சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டவையாக இருந்தன. இப்டா இயக்கத்தில் இருந்த பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள் மற்றும் நாடகக் கலைஞர்கள் தமிழ் சினிமாவிலும் பங்களித்தனர். ‘பசிக்காகப் பாடும் குரல்’, ‘நீதி வேண்டும்’ போன்ற இப்டாவின் பாடல்கள், திரைப்படங்களில் பாரதியார், பெரியார் சிந்தனைகளுடன் இணைந்து வெளிப்பட்டன.


இந்தியச் சுதந்திரப் போராட்ட காலத்தில் தமிழ்த் திரைப்படங்கள், தேசிய உணர்வை ஊட்டுவதோடு, கம்யூனிசச் சிந்தனைகளையும் பரப்பின. எடுத்துக்காட்டாக, சமூக நீதி, பெண் உரிமை, தேசிய உணர்வு என இடதுசாரி சித்தாந்தத்தைக் கருப்பொருளாகக் கொண்ட 1939 ல் வெளிவந்த ‘தியாகபூமி’, மக்கள் எழுச்சியைத் தூண்டும் வகையில் இருந்ததால், பிரிட்டிஷ் ஆட்சி தடை செய்தது. அதே காலகட்டத்தில் வெளியிடப்பட்ட ‘மாத்ருபூமி’ பொதுவுடைமைச் சிந்தனையினைப் பிரதிபலித்து.

இந்திய விடுதலை இயக்கத்தில் கம்யூனிஸ்ட் கலைஞர்கள் ஒரு தனித்துவமான பங்கு வகித்தனர். தங்கள் கலை, பாடல்கள், நாடகங்கள், ஓவியங்கள், இலக்கியம் ஆகியவற்றின் மூலம் மக்களின் மனதில் விடுதலை வேட்கையை வளர்த்தெடுத்தனர்.

1930 மற்றும் 40 களில் இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கம், தொழிலாளர் மற்றும் விவசாயிகள் போராட்டங்களில் வலுப்பெற்ற காலகட்டத்தில் இடதுசாரி கலைஞர்கள், மக்களிடையே சுதந்திரம், சமத்துவம் மற்றும் தொழிலாளர் உரிமைகள் குறித்து விழிப்புணர்வூட்டினர். கம்யூனிஸ்ட்டுகளின் கலைப்பணிகள் காந்தியின் அறவழிப் போராட்டத்துடன் இணைந்து செயல்பட்டாலும், புரட்சி உணர்வை வலியுறுத்துவதாக இருந்தன.

தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் கலைஞர்கள் கிராமங்களில் மேடை அமைத்து, எளிய உரையாடல் மற்றும் பாடல்களுடன் கூடிய அரசியல் நாடகங்களை நடத்தினர்; பெண்கள் மேடைகளில் நடிக்க முன்வராத காலத்தில் விடுதலைக் கனலை விசிறிவரும் நாடகங்களில் கே.பி.ஜானகியம்மாள் பங்கேற்று நடித்தார்.

மக்கள் மனதில் எளிதில் ஏறும் வகையில், சுதந்திரம், ஜமீன்தாரி ஒழிப்பு, தொழிலாளர் சங்கம் அமைத்தல் குறித்த புரட்சிப் பாடல்கள் இயற்றி ஊர்வலங்களிலும் கூட்டங்களிலும் பரப்புரையாகப் பயன்படுத்தினர். அரசியல் செய்திகளைச் சித்திரங்கள் மூலம் மக்களுக்கு எளிதில் புரிய வைத்தனர். மார்க்சிய லெனினிய நூல்களைத் தமிழில் கொண்டு வந்து, அரசியல் விழிப்புணர்வு பரவச் செய்தனர். மக்களின் சிந்தனை ஓட்டத்தை, அரசியல் ரீதியாகத் தீவிரப்படுத்தினர். சுதந்திரப் போராட்டத்தை, விவசாயி தொழிலாளர் சாதி ஒழிப்பு போன்ற சமூக நீதிக்கான போராட்டங்களுடன் இணைத்தனர். பிரிட்டிஷ் காலனியாதிக்க அரசின் தணிக்கையை மீறிக் கலையின் மூலம் அரசியல் செய்தனர். எதிர்கால இந்தியாவின் சமூக மாற்றத்திற்கான கனவு பற்றிய விவாதங்களை உருவாக்கினர்.


சலீல் சவுத்திரி


பால்ராஜ் சஹானி


பண்டிட் ரவிசங்கர்


ரித்விக் கட்டாக்


கே.பி.ஜானகியம்மாள்


காஃவாஜா அகமது அப்பாஸ்


தமிழ் ஒளி


பட்டுக்கோட்டை

வடக்கே, காஜி நஸ்ருல் இஸ்லாம், சஹிர் லூதியன்வி போன்ற கவிஞர்கள், சமூக நீதி, சமத்துவக் கவிதைகள் மற்றும் சமூக மாற்றம் குறித்த பாடல்களை இயற்றி மக்களிடையே பரப்பினர். பால்ராஜ் சாஹ்னி, குர்தீப் குமார், ஷம்பு மித்ரா சத்ய ஜித்ரே, மிருணாள் சென் போன்றோர் இடதுசாரி சிந்தனையுடன் கூடிய மக்கள் நாடகத்தை அறிமுகப்படுத்தினர்.

தமிழ்நாட்டில் இலக்கியப் பேராசான் ஜீவா தம் கூரிய எழுத்தாலும், கலை மற்றும் இலக்கியப் படைப்புகளாலும், இடதுசாரி சிந்தனையைப் பரப்பினார்; தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தை உருவாக்கி அதனை அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தோடு இணைத்தார். மார்க்சியச் சிந்தனைகளைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தினார்; சுதந்திரப் போராட்டத்திலும் தொழிலாளர் இயக்கத்திலும் செயல்பட்டார். தமிழ் மண்ணில் கம்யூனிசக் கருத்துகளை வேரூன்றச் செய்ததில் இவரது பங்கு அளப்பரியது.

நாடகாசிரியர் மற்றும் நடிகர் நா.சுந்தரராமன் ‘இப்டா’ பாணியில் மக்கள் நாடகங்களை எழுதி அரங்கேற்றினார். இவரது நாடகங்கள் சுதந்திரக் கருத்துக்களைப் பரப்பியதோடு, தொழிலாளர் பிரச்சனைகளையும் உரக்கப் பேசியது. இவர் குறிப்பாக, கிராமங்களில் நாடகங்கள் வாயிலாக அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

கவிஞர், பாடலாசிரியர், கே.பி.ராஜகோபாலன், தொழிலாளர் விவசாயிகள் வாழ்க்கையைப் பாடல்களாக வடிவமைத்தார்; போராட்டக் கூட்டங்களில் இவரது பாடல்கள் பரவலாகத் தடம் பதித்தன. தனது பாடல்களை அரசியல் பரப்புரைக்கானதாகவே இயற்றினார்.

சுப்பு.ராமசாமி புரட்சிப் பாடல்கள், தெருநாடகங்கள் ஆகியவற்றை; தொழிற்சாலை முன் நிகழ்த்தினார். இப்டா நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

ஓவியர் சங்கரலிங்கம், கேலிச் சித்திரங்கள், சுவரோவியங்கள் மூலம் ஆங்கிலேய அரசைக் கடுமையாக விமர்சித்தார்; அரசியல் பதாகைகள், சித்திரக் கண்காட்சிகள் மூலம் கிராம மக்களை ஈர்த்தார்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நேரடியாக கம்யூனிஸ்ட் கட்சியில் பங்கேற்காவிட்டாலும், கம்யூனிஸ்ட் கலைஞர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பொதுவுடைமைச் சிந்தனையுடைய பாடல்களை இயற்றினார். இவர் இயற்றிய சமூக நீதி, சாதி ஒழிப்பு, தொழிலாளர் உரிமை குறித்த பாடல்கள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன.

கவிஞர் தமிழ் ஒளி கவிதைகள் மூலமாகவும் வீராயி என்ற புகழ்பெற்ற நாடகத்தின் வாயிலாகவும் முன்னணிப் பாத்திரம் வகித்தார்.

திரைப்படப் பாடலாசிரியர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஏழை, எளிய விவசாயிகளின் பிரச்சினைகளை, பகுத்தறிவு, பொதுவுடமை கருத்துகளைத் திரையில் பிரதிபலித்தார்.

இந்தியச் சுதந்திரப் போராட்ட காலத்தில், வெகுமக்களிடையே சுதந்திரக் கனல் மூட்டியதில் கலை இலக்கியத்திற்குப் பெரும் பங்குண்டு. அதே சமயத்தில், அரசியல் சுதந்திரம் மட்டுமில்லாது சமூகப் பொருளாதார ரீதியான விடுதலைக்கு வித்திடும் இடதுசாரி சிந்தனைகளையும் கலை, இலக்கியம் வாயிலாக அறிமுகப்படுத்தி வேரூன்றச் செய்த பெருமை கம்யூனிஸ்டுகளையே சேரும்.

சுதந்திரப் போராட்டத்தில் முற்போக்குக் கலைஞர்களின் பங்கு

# புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டச் செயலாளர்கள்



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கே.நடராஜன் | என்.எஸ்.பெருமாள் | எஸ்.டி.பிரபாகரன் | எஸ்.மோகன்குமார் | பி.துரை | கே.கலாராணி | கே.இராமசாமி |
| அரியலூர் | இராமநாதபுரம் | ஈரோடு தெற்கு | ஈரோடு வடக்கு | கடலூர் | கரூர் | கள்ளக்குறிச்சி |




| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தா.சுபாஷ் சந்திரபோஸ் | பி.வி.சீனிவாசன் | டி.ராமச்சந்திரன் | சி.சிவசாமி | நா.சாத்தையா | எ.ராஜ்குமார் | ஏ.மோகன் |
| கன்னியாகுமாரி | காஞ்சிபுரம் | கிருஷ்ணகிரி | கோவை | சிவகங்கை | செங்கல்பட்டு | சேலம் |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கோ.சக்திவேல் | மு.அ.பாரதி | எஸ்.கலைச்செல்வம் | ஏ.பி.மணிகண்டன் | எஸ்.சிவா | செ.ராஜ்குமார் | ஆர்.சடையப்பன் |
| தஞ்சை தெற்கு | தஞ்சை வடக்கு | தர்மபுரி | திண்டுக்கல் | திருச்சி மாநகர் | திருச்சி புறநகர் | திருநெல்வேலி |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எம்.நந்தி | ஆர்.செந்தில்குமார் | கே.எம்.இசாக் | கே.கஜேந்திரன் | எஸ்.கேசவராஜ் | த.இசக்கித்துரை | எஸ்.கே.சிவா |
| திருப்பத்தூர் | திருப்பூர் மாநகர் | திருப்பூர் புறநகர் | திருவள்ளூர் | திருவாரூர் | தென்காசி | தென் சென்னை |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கே.பெருமாள் | பி.கரும்பன் | சிவகுரு. பாண்டியன் | த.செங்கோடன் | வி.ஜெயராமன் | கே.கே.சாமி | பி.முத்துவேல் |
| தேனி | தூத்துக்குடி | நாகப்பட்டினம் | புதுக்கோட்டை | பெரம்பலூர் | மதுரை மாநகர் | மதுரை புறநகர் |




| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மு.வரதன் | அ.சீனிவாசன் | த.கு.வெங்கடேஷ் வேம்புலி | எஸ்.செந்தில்குமார் | ஜி.லதா | ஆ.சௌரிராஜன் | க.அன்புமணி |
| மத்திய சென்னை | மயிலாடுதுறை | வடசென்னை | விருதுநகர் | வேலூர் | விழுப்புரம் | நாமக்கல் |

Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026
WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026
Posted on Every Friday & Saturday
Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி


## 26வது தமிழ்நாடு மாநில மாநாடு சிறக்க

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் வாழ்த்துகள்





(2 தொகுதிகள்)

ரூ 1000/-





(12 தொகுதிகள்)

ரூ 4275/-





(10 தொகுதிகள்)

ரூ 1000/-





(6 தொகுதிகள்)

ரூ 2200/-




(4 தொகுதிகள்)

ரூ 1750/-




ரூ 600/-

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in

### கிளைகள்

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.